752

1734

# ...ல்வில்ஹரி

61709

...ன்னசாமி

# வல்வில் ஓரி

புலவர் : தே. ப. சின்னசாமி, எம்.ஏ.,பி.எட்.,

தேன்தமிழ்ப் பதிப்பகம்
85, சுப்பிரமணியம் தெரு,
சேலம்-636 001.

| | | |
|---|---|---|
| நூல் | : | வல்வில் ஓரி |
| ஆசிரியர் | : | புலவர் தே ப. சின்னசாமி, எம்.ஏ., பி.எட் |
| உரிமை | : | பதிப்பகத்திற்கு |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| நாள் | : | பிப்பிரவரி, 1988 |
| தாள் | : | 10·9 டபுள் கிரவுன் |
| நூல் அளவு | : | 1 × 8 கிரவுன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| கட்டு | : | அட்டைக் கட்டு & லேமினேசன் |
| பக்கம் | : | 60 |

விலை : உரு. **4—50**

வெளியீடு : தேன் தமிழ்ப் பதிப்பகம். சேலம்-1.

அச்சு : கதிரவன் அச்சகம், சேலம்-1.

# அணிந்துரை.

**கி. தனவேல்,** எம்.ஏ.,பி.எல்,
கோட்ட ஆட்சித் தலைவர்.
நாமக்கல்.

கொல்லி மலையினைப் பற்றியும் கொல்லியாண்ட வல்வில் ஓரியினைப் பற்றியும் இதுவரையில் பல்வேறு கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றனவே யன்றி முழுமையான வரலாற்று நூல் ஏதும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. இக் குறையைப் போக்குகின்ற வகையில் புலவர். தே. ப. சின்னுசாமி அவர்கள் இந் நூலைத் திறம்பட எழுதியுள்ளார்.

வல்வில் ஓரியின் வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியங்களே நமக்குப் பெரிதும் துணை செய்கின்றன. வளம்சேர் கொல்லியின் வல்வில் ஓரி மன்னனுடைய வரலாற்றைச் சங்க இலக்கியங்களின் துணை கொண்டு ஆசிரியர் தெளிவுபடவும், சுவை குன்றாமலும் தொகுத்துத் தந்துள்ளார். சங்கப் பாடல்களில் மட்டு மின்றி இடைக்காலப் பாடல்களிலும் கொல்லி மலையின் வளம் இடம் பெற்றுள்ளது என்பதனை,

''கொல்லிமலைத் தேன் சொரியும் கொற்றவா
—நீ முனிந்தால்
இல்லையோ எங்கட்கிடம்.''

என்ற தனிப்பாடல் வரிகளால் அறியலாம்.

கொல்லி மலைத்தேன் இலக்கியத்தில் பாராட்டப் படுகின்ற செய்தியும், ஓரி என்பது முதிர்ந்த தேனின் நிறம் என ஆசிரியர் கூறும் செய்தியும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய உகந்தவை.

வல்வில் ஓரியின் வரலாற்றை அறிய விரும்புவோர்க்கும், ஆய்வு செய்ய விரும்புவோர்க்கும் இந்நூல் ஒரு வாயிலாக அமையும்.

கொல்லிக் கூற்றம் என்பது தற்போதைய நாமக்கல் வருவாய்க் கோட்டத்தின் ஒரு பகுதியாகும். இப் பகுதியின் வரலாற்றை எழுதிய ஆசிரியருக்குத் தனிப்பட்ட முறையில் நன்றியும், பாராட்டுதலும் கூறக் கடமைப் பட்டுள்ளேன் !

ஆசிரியரின் பிற நூல்களைப் போலவே இந் நூலும் கற்றோர் நடுவில் ஏற்றம் பெறும் என்பதில் ஐயமில்லை!

இது போன்ற தரமான நூல்களை வெளியிடும் தேன் தமிழ்ப் பதிப்பகத்தாருக்கும் நமது பாராட்டுதல் உரியது !

அன்புடன்,

**கி. தனவேல்,**

*22—1—88.*

# வல்வில் ஓரி – வரலாற்று வாயில்

சங்க இலக்கியங்களே சங்ககால வரலாற்றை அறிய உதவும் சிறந்த சான்றுகளாகும். அச் சங்ககால இலக்கியங்களிலிருந்து வல்வில் ஓரியின் வரலாற்றை ஆய்ந்து எழுதப்பட்டதே இந்நூல் வடிவமாகும். வல்வில் ஓரியின் வரலாற்றிற்குப் பிற கல்வெட்டு முதலான சான்றுகள் ஏதுமில்லை.

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஒத்த பதிற்றுப் பத்து, கற்றோரேத்தும் அகம், புறம், சிறுபாணாற்றுப்படை ஆகியவற்றில் மட்டுமே ஓரியின் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. நூலில் ஆங்காங்கே சான்றுகளாகும் பாடல்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

இந்நூலின் சுருக்கத்தை இந்த நூல் வாயிலில் காணலாம்.

**பெயர்:**

ஓரி என்பது தேனின் முதிர்ந்த நிறமாகும். செம்மை சார்ந்த மாந்தளிர் நிறத்தை உடையவனாகிய ஓரியை நிறம்பற்றி ஓரி என்றே அழைத்தனர் என்பர். ஓரி நிறத்தை உடைய குதிரையைப் பெற்றதால் ஓரி எனப் பெயர் வந்தது என்றும் கூறுவர். ஓரி என்றும், ஆதன் ஓரி என்றும் இவனது பெயர் இலக்கியங்களில் குறிக்கப் பட்டுள்ளது. வல்வில் இவனது வில்லாற்றல் வலிமைக்கு அளிக்கப் பட்ட அடைமொழியாகும்.

**ஆட்சியிடம்:**

ஓரி கொங்கு நாட்டின் மழவர் குடியில் பிறந்தவன். தன் வில்லாற்றலால் குறுநில மன்னன் ஆனான். சேரர் தம் பேரரசிலிருந்து கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கொல்லிக் கூற்றத்தை விடுவித்து ஆட்சி ஏற்றான். இவன்

ஆண்ட கொல்லிக் கூற்றம் கொல்லி மலையும், அதன் சுற்றுப் பகுதியுமாகும். தற்போதைய நாமக்கல், இராசிபுரம் வட்டங்கள் கொல்லிக் கூற்றத்தில் அடங்கியிருந்தனவாம். இது சேர நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் எல்லையாக இருந்தது. சேரர் ஆட்சியிலும், சோழராட்சியிலும் மாறி மாறி இருந்துள்ளது.

**ஓரியின் காலம்:** *(கி. பி. 145—165)*

ஓரி கடைச்சங்க காலத்தவன். சேரன்செங்குட்டுவன் காலம் கி. பி. 150 முதல் கி. பி. 200 வரை என வரலாற்று ஆசிரியர்கள் வரையறை செய்துள்ளனர். சேர நாட்டை இரு மரபினர் ஆண்டனர். குட்டுவன் மரபினர், இரும்பொறை மரபினர் எனக் கூறுவர். சேரன்செங்குட்டுவன் குட்டுவன் மரபினன். பெருஞ்சேரலிரும்பொறை இரும்பொறை மரபினன். சேரன்செங்குட்டுவன் காலத்திலேயே பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் கருவூரைத் தலை நகராகக் கொண்டு கீழ்கொங்கை ஆண்டு வந்தான். இவனது ஆட்சிக் காலம் கி. பி. 150 முதல் கி. பி 167 வரை என்பதைப் பதிற்றுப் பத்தால் அறியலாம். இரும்பொறை வல்வில் ஓரியை மலையமான் திருமுடிக்காரி மூலம் வென்றான். ஆகவே ஓரியின் காலமும், பெருஞ் சேரலிரும்பொறையின் காலமும் ஒன்றாகும். ஆகவே கி. பி. 145 முதல் 165 வரை ஓரியின் ஆட்சிக் காலம் என வரையறுக்கலாம்.

**ஓரியின் வல்வில் வீரம்:**

கொங்கு நாட்டு வீர மரபினரான மழவர் குடியில் பிறந்ததே ஓரியின் வீரத்திற்கு அடிப்படையாகும். ஓரி தன் தனி ஆற்றலால் சிறந்து விளங்கியவன். வில்லாற்றலில் வீரம் விளைத்தவன். தான் எய்த ஒரே அம்பால் யானை, புலி, மான், பன்றி, உடும்பு ஆகியவைகளை வீழ்த்தியவன்.

### ஓரியின் கொடை:

ஓரி படைமடங்கொண்ட கடையெழு வள்ளல்களில் ஒருவன். ஓரி புலவர்களுக்குத் தன்னாட்டில் கிடைத்த பொன்னும், மணியும் பரிசாக அளித்தான்; யாழ்ப்பாணர் களுக்கு யானையும், பொருளும் கொடுத்தான்; கூத்தர் களுக்கு நாடு பலவும் நல்கினான்; இவன் கொடுத்த செல்வ வளத்தால் பாணர்கள் ஆடல், பாடல் மறந்திருந்தனர். அவர்களின் புகழ்ப் பாடலுக்கு நாணமுற்ற புகழ் வேண்டாப் புரவலனாய் விளங்கினான் ஓரி.

### ஓரியைப் பாடியவர்கள்:

ஓரியைப் பாடிய புலவர்கள் பலர். பரணர், வன்பரணர். கபிலர், கழைதின் யானையார், பெருஞ்சித்திரனார், நல்லூர் நத்தத்தனார், பாலத்தனார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

### ஓரியின் வாழ்க்கை:

ஓரி மழவர் குடியில் பிறந்தவன்; தகடூர் அதியமானின் உறவினன்; வேளாவிக்கோமான் மகள் வேண்மாளை மணந்தவன்; பாவை என்ற பேரழகு வாய்ந்த பொற்கொடியை மகளாகப் பெற்றவன்; கொல்லிக் குளி ரறைப் பள்ளி ஈசனை வழிபட்டவன்.

### வரலாற்றுக் குறிப்பு:

ஓரி கொல்லிக் கூற்றத்தை ஆண்டவன்; கொல்லிக் கூற்றத்தில் வளப்பூர் நாட்டில் வாசலூர்ப் பட்டியில் இவனது கோட்டை இருந்தது. பெருஞ்சேரல் இரும் பொறை ஓரியைத் தனக்கு அடங்கிய குறுநில மன்னனாக இருக்க வேண்டினான். உரிமையை உயிர் மூச்சாகக் கொண்ட வல்வில் ஓரி மறுத்துவிட்டான்; பெருஞ்சேரல் இரும்பொறை ஓரியின் மீது படை எடுத்து வரத் திட்டமிட் டான்; அதியமானிடம் தோற்று ஓடிய மலையமான்

திருமுடிக்காரி பெருஞ்சேரலிரும்பொறையிடம் அடைக்கலம் புகுந்தான். மலையமான் காரி பெருஞ்சேரலிரும்பொறையின் பெரும் படை துணையோடு வல்வில் ஓரிமீது திடீரெனத் தாக்கினான். வில்லாற்றல் மிக்க வல்வில் ஓரி படைபலம் குறைந்தவன். ஆகவே காரி ஓரியை வென்றான்; இல்லை கொன்றான். ஓரி இறந்த பின் பெருஞ்சேரலிரும்பொறை தன் படைத் தலைவன் பிட்டங்கொற்றனுக்கு கொல்லிக் கூற்றத்தை அளித்தான்.

ஓரியின் மனைவி வேண்மாளும், மகள் பாவையும் ஓரியுடன் மடிந்தனர். இந்த வரலாற்று நூல் கொல்லியம் பாவை என்ற வரலாற்று நாவலுக்கு முன்னோடியாக அமைந்தது.

தரமான நூல்களை வெளியிடும் தேன்தமிழ்ப் பதிப்பகத்தார் ஓரியின் வரலாற்றை நன்முறையில் வெளியிட்டுள்ளனர். நூல் வடிவில் தந்த திரு. மு. வை. அவர்களுக்கும் மதிப்புரை நல்கிய நாமக்கல் கோட்டாட்சித் தலைவர் திரு. தனவேல் அவர்களுக்கும் நன்றியை நவில்கின்றேன். நூல் பற்றிய கருத்துரையை வாசகர்களிடமிருந்து வரவேற்கின்றேன்.

42-ஈ. பாரதி இல்லம், நாமக்கல்-637002

அன்பன்,
**தே. ப. சின்னசாமி.**

# வல்வில் ஓரி

## கடையெழு வள்ளல்கள்

சங்க காலத்தில் கடையெழு வள்ளல்கள் இருந்தனர். கொடை மடம் பட்ட அவர்கள் படை நலம் பெற்றுத் திகழ்ந்தனர். இந்த எழுவரைப் பற்றிய பட்டியல் தந்த சங்கச் சான்றோர் இருவர். அருந்தமிழர் தம் வாழ்வியலை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டிய பெருஞ்சித்திரனார் ஒருவர். சிறுபாணாற்றுப்படை சித்தரித்த இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் மற்றொருவர். பெருஞ்சித்திரனர் புறநானூற்றுப்பாடல் 158-ல் கடையெழு வள்ளல்களைப் பற்றி அவர்களின் கொடைத் தன்மையுடன் குறிப்பிட்டுள்ளார். நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப் படையில் 84—114 அடிகளில் தெள்ளிதின் விளக்குகின்றார்.

**புறநானூற்றுச் சான்று:**

குமணனைப் பாடிய பெருஞ்சித்தரனார், கடையெழு வள்ளல்கள் எழுவரும் மாய்ந்தனர்; பாடிவருநரும் ஆடிவருநரும் வாடியுள்ளனர்; இரந்தோர்க்கு அற்றம் — (வறுமை) தீர்க்கும் மருந்து தேடி விரைந்து வந்தனர். அதிராயாணர் முதிரத்துக் கிழவனே! இயல் தேர்க் குமணனே! யான் உன்னை உள்ளி வந்தனன்! அள்ளி அளிப்பாய் என்று பாடினார்.

''முரசு கடிப்பு இருப்பவும், வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொறாத அண்ணல் நெடுவரை
கறங்குவெள்ளருவி கல்லலைத்து ஒழுகிப்
பறம்பின் கோமான் பாரியும்; பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வில் லோரியும்;
காரி ஊர்ந்து பேர்அமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்;
ஊராது ஏந்திய குதிரை, கூர்வேல்
கூவிளங் கண்ணி கொடும்பூண் எழினியும்;
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமை
பெருங்கல் நாடன் பேகனும்; திருந்துமொழி
மோசிபாடிய ஆயும்; ஆர்வம் உற்று
உள்ளி வருநர் உலைவு நனிதீர
தள்ளாது ஈயும் தகைசால் வண்மை
கொள்ளார் ஓட்டிய நள்ளியும்; எனஆங்கு
எழுவர் மாய்ந்த பின்றை, அழிவரப்
பாடி வருநரும், பிறரும் கூடி
இரந்தோர்க்கு அற்றம் தீர்க்குஎன'' (புறம். 158)

**சிறுபாணாற்றுப் படைச் சான்று:**

''ஓய்மானாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படை கடையெழு வள்ளல்களை வரிசைப் படுத்துகின்றது. ''முதுவாயிரவல! பெருமகன் புரவலனாகிய நல்லியக் கோடனை நயந்த கொள்கையோடு முன்னாட் சென்றனமாக, இந்நாள் அழிபசி வருத்தம் வீட, யானையோடே தேரெய்தி யாம் அவணின்றும் வருகின்றோம். இனி, நீயிரும் மூவேந்தரிடத்துச் செல்வீராயின் வஞ்சியும் வறிது, மதுரையும் வறிது, உறந்தையும் வறிது, அதுவன்றி எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகமும் வறிதாயின. சேர, சோழ, பாண்டியரும் மாய்ந்தனர்; கொடைமடம் பூண்ட கடை

யெழு வள்ளல்களும் மாய்ந்தனர். ஓய்மானாட்டு நல்லியக் கோடனிடமே செல்லுங்கள். வறுமை மாய்ந்துவிடும்'' என்பார் நத்தத்தனார்.

''வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கிய ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்; சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரியும்; கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி இரவலர்க் கீந்த
அழறிகழ்ந் தீமைக்கு மஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும்; நிழல்திகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும்; மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி அவ்வைக் கீந்த
உரவு சினங்கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடல்தானை அதிகனும்; கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முளைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும்; நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த,
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் எனவாங்கு
எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க'' *(சிறுபா.84-114)*

**கடையெழு வள்ளல்கள்:**

கறங்கு வெள்ளருவி கல்லலைத்து ஒழுகும், பறம்பின் கோமான்பாரி. பிறங்கு மிசைக் கொல்லியாண்ட வல்வில் ஓரி; காரி ஊர்ந்து பேர் அமர்க்கடந்த மாரி ஈகை மறப் போர் மலையமான் திருமுடிக்காரி; குதிரை மலைக் கோமான் அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த எழிலன் தகடூர் அதியமான்; அருந்திறலாற்றல் பெருங்கல்நாடன், மயிலுக்குப் போர்வை போத்திய பேகன்; திருந்துமொழி மோசிகீரன் அருந்தமிழ்ப் பாவில் பதிந்த ஆய்; உள்ளி வருநர் உலைவு நனிதீர தள்ளாது ஈந்த தகைசால் வண்மை கொள்ளார் ஓட்டிய நள்ளி ஆகிய எழுவரும் கடையெழு வள்ளல்கள் ஆவர்.

**கடையழு வள்ளல்கள் கொடுத்த பரிசு:**

1. முல்லைக்குத் தேரீந்தான் பறம்பு மலைக் கோமான் பாரிவள்ளல். 2. தன்னை நாடிவந்த இரவலர்களுக்கு கொல்லிக் கூற்றத்திலுள்ள நாடுகளை யெல்லாம் கொடுத்து மகிழ்ந்தான் வல்வில் ஓரி. 3. பாடி வந்த பாவலர்களுக்கும், பாணர்களுக்கும் கறங்கு மணி ஒளி நெடும்புரவியொடும் பொருள் பல மாரியென மகிழ்ந்தளித்தான் திருக்கோவலூர் காரி; 4. கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி அமிழ்துவிளை தீங்கனி அவ்வைக் கீந்தான் தகடூர் அதியமான்; 5. நெடுநல் வாடையில் வாடி நடுங்கிய மயிலுக்குப் போர்வை போர்த்தி ஆர்வமுற்றான் பேகன்; 6. அரச குற்றத்திற்கு ஆளான மோசி கீரனுக்கு அரும்பெறல் உயிரைக் காப்பாற்றி உறு பொருள் கொடுத் துயர்ந்தான் தாயினும் மேலான ஆய்; 7. நாடிவந்த நற்றமிழ்ப் புலவர்களுக்குத் தேடிச்சென்று ஊனும், நீரும் கொடுத்து உயிர் கொடுத்த தோடமையாது உறுபொருள் அணியார் மணி ஆரம் அளித்தும் பெயர் கூறாது மறைந்த புகழ் வேண்டாப் புரவலனானான் நள்ளி. இவ்வாறு கறவாமல் ஈகைக் கடனை இந்த உலகத்திற்கு எடுத்தியம்பிச் சென்றனர் கடையெழு வள்ளல்கள். அவர்கள் கொடை மடத்தால் அழியாது புகழ் கொண்டனர். அவர்களின் அரும்பெரும் புகழ் பொன்றாது புவியில் நிலவுகின்றதே சான்றாகும்.

இந்நூலில் வல்வில் ஓரியின் வரலாற்றை இலக்கியங்களின் துணை கொண்டு காண்போம். மழவர் குடியில் பிறந்த மாவீரன் வல்வில் ஓரி தன் வில்லாற்றலால் மன்னனானான். கொல்லிக் கூற்றத்திற்கு அரசனாக இருந்தான்; கொடை மடங் கொண்டவனாக விளங்கினான்.

**கடையெழு வள்ளல்கள் வரிசையில் வல்வில் ஓரி:**

கடையெழு வள்ளல்கள் வரிசையில் வல்வில் ஓரியும் ஒருவனாவான். இதனை, புறநானூறு, சிறுபாணாற்றுப் படை அடிகளால் அறியலாம்.

''பிறங்குமிசைக் கொல்லியாண்ட வல்வில்லோரியும்''
(புறம்-158 – 5)

''நளிசினை, நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும்'' (சிறுபா. 108-111)

எனவரும் புறநானூறு, சிறுபாணாற்றுப்படை அடிகள் சான்றாகும். புறத்தில் பெருஞ்சித்திரனார், ''எழுவர்'' எனும் தொகைக் குறிப்பையும் கொடுத்துள்ளார். ''எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்'' என சிறபாணாற்றுப் படையும் அதனையே வலியுறுத்தும். வல்வில் ஓரி வில் ஆற்றலால் பெரும் புகழ் கொண்டிருந்தான். கொல்லி மலையை ஆண்டான்; தன்னாட்டின் பல குறுநாடுகளை யாழ்வல்ல பாணர்களுக்கு ஈந்தான்; கரிய குதிரையை உடைய காரி என்ற வள்ளலுடன் போர் செய்தான்; ஓரி என்ற அழகிய குதிரையைப் பெற்றிருந்தான் என்ற செய்திகளை இதனின்றும் அறியலாம்.

**வல்வில் ஓரி என்ற பெயர்க் காரணம்:**

ஓரி-ஒருவகை நிறம், குதிரை, வள்ளல், பிடரி மயிர் என உரை கூறுவார் நச்சினார்க்கினியர், பத்துப் பாட்டில், மலைபடுகடாம் (524) அடி ''நீல்நிறம் ஓரி பாய்ந்தென—

நீல நிறத்தை உடைய ஓரி நிறம் பரந்ததாக என விளக்கம் கூறுவார். ஓரி என்பது தேன் முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம்'' என புறம்—105 பாடல் உரையில் இனிது விள்க்குவார். மாந்தளிர் நிறத்தினை உடையவர்களை மாநிறம் என்பர். தேன் முதிர்ந்த நிறம் செம்மையும் நீலமும் கலந்த நிறம். அந்த நிறத்தை உடைய குதிரையை ஓரி வைத்திருந்தான்; அதனால் அக் குதிரைக்கும் ஓரி எனும் பெயராயிற்று. ஓரி நிறத்தைப் பெற்றிருந்த இந்த வள்ளலுக்கும் ஓரி எனும் பெயராயிற்று எனலாம். அதே போல் கரிய குதிரையைக் காரி வைத்திருந்தான். அதற்கும் காரி என்றே பெயர் உண்டு. அரசன் பெயராலே அவனது குதிரைக்கும் பெயர் வந்திருக்கலாம். காரியின் குதிரை கருமையானது. ஓரியின் குதிரை நீலம்+செம்மை கலந்த தேனின் நிறம் எனலாம். எனவே நிறத்தடிப் படையில் ஓரிக்குக் காரணப் பெயராக பெயர் அமைந்திருக்கலாம். சங்ககால அரசர்களில் வில்லுக்கு ஓரி தான் முதன்மை வகித்தான் போலும். வில்லுக்கு இராமன், அர்ச்சுனன் போல் ஓரியும் இருந்தான் என்பதை அறிகின்றோம். அவனது வில்லாற்றல் வல்லமைக்கு அளித்த அடைமொழி தான் வல்வில்.

ஓரியின் வில் வல்லாற்றல்:

வேட்டையாடுவதில் வல்லவனாகிய ஓரியின் வில் ஆற்றல் ஆற்றல் மிக்கது. அவனது ஆற்றலை யாரும் பெற்றதில்லை. அவனது வில்லாற்றல் வலிமைக்கு ஒரு நிகழ்ச்சி சான்றாக அமைந்தது. அந் நிகழ்ச்சியை நேரில் கண்ட பரணர் வியந்து பாடியுள்ளார். புறம். 152ஆம் பாடல் இதனைத் தெளிவுபடுத்தும்.

''வேழம்வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ
புழல்தலைப் புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்
கேழல் பன்றி வீழ அயலது

ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்
புகழ்சால் சிறப்பின் அம்புமிகத் திளைக்கும்''

(புறம். 152: 1—7)

கொல்லிமலை அடுக்கடுக்காய் உயர்ந்தது. வல்வில் வேடன் ஓரி வேட்டைக்குப் புறப்பட்டான்' காலைக் கதிரவன் சோலையெங்கும் பொன்னொளி பரப்பி இருந்தான். வெயில் நுழைபறியாக் குயில் நுழை பொதும்பர் எங்கும் பொலிவுடன் திகழ்ந்தது. அக் கண்ணுக்கினிய அருங் காட்சியில் திளைத்தான் ஓரி. அடுக்கு மலையின் குன்றேறி நின்றான். அடுக்கடுக்காய் தாழ்ந்த பள்ளத் தாக்கினை நோட்ட மிட்டான். நாளிரை தேடி வந்த யானை நிற்ப தைக் கண்டான்; அதற்கடுத்த அடுக்கில் யானையை நோக் கிப் பிளந்த வாயுடன் நின்ற புலியைக் கண்ணுற்றான். புலி நிற்பதை மறந்த கலைமான் ஓடி வருவதைப் பார்த் தான். அதனை அடுத்து பன்றி மணற்கீண்டு கிழங்கினை அசை போடுவதும் தெரிந்தது. அதனை அடுத்த புற்றில் உடும்பு தலை நீட்டிக் கொண்டு இருந்ததையும் உணர்ந் தான். தன் வில்லாற்றலுக்குச் சான்றாய் வாய்த்த வாய்ப் பினை நினைத்தான். எடுத்தான் அம்பை. வளைத்தான் வில்லை; தொடுத்தான் அம்பு. வேழத்தை வீழ்த்திய அம்பு அதனை ஊடுருவி வெளியேறியது. வாய் பிளந்த புலி யின் வாய் புகுந்து தலையைப் பிளந்து சென்றது. மேய்ந்து கொண்டிருந்த கலைமான் உடலைக் கீறி உருட்டித் தள்ளி யது. அடுத்திருந்த பன்றியின் குடலைக் கிழித்து வெளி யேறியது. அதன் வேகம் அடங்கவில்லை. புற்றில் பதுங்கி இருந்த உடும்பின் தலையில் குத்திட்டு நின்றது. யானை யின் உடல், புலியின் வாய், மானின் உடம்பு, பன்றியின் குடல், உடும்பின் தலை யாவும் மேலிருந்து அம்பு கீழ் நோக்கிய சாய்ந்த நேர்க்கோட்டில் அமைந்திருந்த வாய்ப்பே வல்வில் ஆற்றலுக்கு வழியானது எனலாம்.

**ஓரியின் காலம் :** (கி.பி. 145—165)

கடையெழு வள்ளல்கள் யாவரும் கடைச்சங்க காலத்தவர் என்பதை எவரும் அறிவர். கடைச்சங்க காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் வரையறைப்படுத்தி வகுத்துள்ளனர். இரண்டாவது கடல்கோல் கி. மு. 150 - இல் நடைபெற்றது என்பர். எனவே கடைச்சங்கத்தில் துவக்கம் கி.மு. 150 எனலாம். கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் களப்பிரர் தமிழகத்தில் ஆட்சி அமைத்தனர். ஆகவே கி. மு. 150 முதல் கி. பி. 200 வரை உள்ள காலத்தையே கடைச்சங்க காலம் எனக் கூறலாம்.

ஓரியின் காலத்தைச் சரியாகக் கணிக்க உரிய வரலாற்றுச் சான்றில்லை. ஆனால் அவனது காலத்துச் சேர அரசர்களின் காலத்தோடு ஒப்பவைத்து அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. கடைச்சங்க காலத்துச் சேர அரசர்கள் எண்மருடைய வரலாற்றுக் குறிப்புகள் பதிற்றுப்பத்து எனும் நூலில் உள்ளது. சேர அரசர்கள் இரு வழி முறையில் வந்தமையை இது உணர்த்துகின்றது. உதியஞ் சேரல் மரபு ஒன்று; அந்துவஞ்சேரல் மரபு மற்றொன்று. உதியஞ் சேரல் மக்கள் இருவர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் முன்னவன்; பல் யானைச் செல்கெழுகுட்டுவன் பின்னவன். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மக்கள் நால்வர். அதில் மூவர் அரச பாரத்தைத் தாங்கியவர்கள். இளங்கோவடிகள் துறவு மேற்கொண்டவர். இமயவரம்பனுக்கு இருபெரும் தேவியர் இருந்தனர். வேளாவிக் கோமான் பதுமன் தேவிக்குப் பிறந்தவர்கள்தான் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும், களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரலும். சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணைக்குப் பிறந்தவர்கள் தாம் சேரன்செங்குட்டுவனும், சிலம்பிசைத்த இளங்கோவும், பொறையன் மரபிலே அந்துவஞ்சேரலிரும்பொறை முன்னவன். அவன் மகன் செல்வக் கடுங்கோவாழியாதன் எனபவன். செல்வக் கடுங்கோவாழியாதன் கருவூரிலிருந்து ஆட்சி புரிந்தான்.

எனப் புகளூர் கல்வெட்டு கூறுகின்றது. எனவே முதல் மரபினர் வஞ்சியிலிருந்து சேர நாட்டை ஆண்டார்கள் என்பதும் அறிதற்குரியதாகும். செல்வக்கடுங்கோவின் மகன் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையாவான். பெருஞ்சேரல் இரும்பொறையின் மகன் தான் இளஞ்சேரல்இரும்பொறை. இவனது கல்வெட்டும் புகளூரில் உள்ளதால் இம் மரபினர் கருவூரிலிருந்து சேர நாட்டின் கீழ்ப்பகுதியை ஆண்டனர் என்பதை அறியலாம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மனைவியும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அன்னையும் ஆன வேளாவிக் கோமான் பதுமன்தேவி எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது. (4-ஆம் பத்து—பதிகம்) அதேபோல் செல்வக்கடுங்கோ வாழியாதன் மனைவியும், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் தாயும் ஆனவளும் வேளாவிக்கோமான் பதுமன்தேவி என்றே பதிற்றுப்பத்து கூறுகின்றது. (பதிற்றுப்பத்து- 8-ஆம் பத்து—பதிகம்)

எனவே சேரன்செங்குட்டுவன் சிற்றன்னையும், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் அன்னையும் வேளாவிக்கோமான் என்ற சிற்றரசனுக்குப் பிறந்த பெண் மக்களாவார்கள். சேரன்செங்குட்டுவனும், பெருஞ்சேரலிரும்பொறையும் சமகாலத்தவர் என்புதை அறியலாம். சேரன்செங்குட்டுவன் காலம் கி. பி. 150 முதல் கி. பி. 200 வரை என்பதை இராசமாணிக்கனாரின் சோழ வரலாறு கூறுகின்றது, இலங்கை மகாவம்சமும் இதனையே வலியுறுத்துகின்றது.

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் காலமும் கி. பி. 150—200-க்குள் அடங்கும் எனலாம். பெருஞ்சேரலிரும்பொறை காரியின் மூலம் ஓரியைக் கொன்றான். அதியமானையும் கொன்றான். பெருஞ்சேரலிரும்பொறையின் காலந்தான் ஓரியின் காலமும் ஆகும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

செங்குட்டுவன் வஞ்சியிலிருந்தும், பெருஞ்சேரல் இரும்பொறை கருவூரிலிருந்தும் சேர நாட்டை ஆண்டனர் என்பதும், ஒரே காலத்தில் ஆட்சி புரிந்தனர் என்பதும் தெரிய வருகின்றது. செங்குட்டுவன் 55 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப்பதிகம் கூறுகின்றது. பெருஞ்சேரலிரும்பொறை 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என எட்டாம் பத்துப் பதிகம் கூறுகின்றது. இளஞ்சேரலிரும்பொறை 16 ஆண்டுகள் ஆண்டான் என ஒன்பதாம் பத்துப் பதிகம் கூறுகின்றது. எனவே இவர்களின் ஆட்சிக்காலம் 33 ஆண்டுகள் எனத் தெரிகின்றது. ''சேரன் செங்குட்டுவன் கொல்லியாண்ட குடவர்கோவே'' எனச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதால் கி. பி. 183 இல் இரு இரும்பொறை அரசர்களுக்குப் பின் செங்குட்டுவன் ஆட்சி கொங்கு நாடு தழுவிய கொல்லிமலை வரை பரந்திருந்தது என்பதையும் அறியலாம்.

கி. பி. 150 முதல் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறை சேர நாட்டைக் கருவூரிலிருந்து ஆட்சி புரிந்தான். அந்தக் காலத்தில்தான் இவன் ஆமூர் கழுவுள் என்பவனை முதற்கண் வென்றான்: அவனை நட்பாக்கிக் கொண்டான். அதன்பின் வல்வில் ஓரியை அவனுக்கு அடங்கிய அரசனாக இருக்க வேண்டினான். ஓரி மறுத்து விட்டான். காரியின் துணையால் ஓரியைக் கொன்றான். ஓரிக்குப் பின் அதியனையும் கொன்றான் என்பதை அறிகின்றோம். இவன் 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்பதால் கி. பி. 150 — கி. பி. 167 அவனது ஆட்சிக் காலமாக இருக்கலாம்.

எனவே வல்வில் ஓரியின் காலமும் இந்த எல்லைக்குள் தான் அடங்க வேண்டும். ஆகவே வல்வில் ஓரியின் காலம் கி. பி. 145—165 என வரையறுக்கலாம்.

# கொல்லிமலை

## பெயர்க்காரணம்:

கொல்லிப்பாவை இருந்து இலக்கியச் சிறப்பு பெற்றதால் கொல்லிமலை எனப்பெயர் வந்தது என்பர். கொல்லி மலையில் ஒருவகைப் பூ பூத்து மணம் பரப்பிக் கொண்டிருக்கும். அதுவும் மாரிக் காலத்தில் மிகுதியாகப் பூத்துக் குலுங்கும். இந்தக் காலங்களில் இம் மலைக்குச் செல்வோருக்கு ஒரு வகையான காய்ச்சல் வரும். அக் காய்ச்சலுக்கு மலைக் காய்ச்சல் என்று பெயர். அக் காய்ச்சல் கண்டவர்கள் முகம், கை, கால், வயிறு வீங்கி இறந்தே விடுவார்கள். அதனால் இதற்குக் கொல்லிமலை எனப்பெயர் வந்தது என மலை சூழ்ந்த மக்கள் மரபு வழியாகக் கூறி வருகின்றனர். கொல்லி மலையில் யாரேனும் வந்து தீமை செய்தாலோ, தீமை நினைத்தாலோ கொல்லிப்பாவை அவர்கள் முன் அழகோடு தோன்றி அவர்களை அச்சுறுத்திக் கொன்று விடும். சினந்து சிரிக்கும். அச் சினம் தாங்கும் ஆற்றலின்றி இறந்து விடுவார்கள். திருவள்ளுவரும், ''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி''[1] என்றார். சேர்ந்தவர்களைக் கொல்லும் ஏதுவால் இதற்குக் கொல்லிமலை எனப்பெயராயிற்று என்பர். சங்க கால இலக்கியங்களில் தான் இது கொல்லிமலை எனப்பெயர் பெற்றிருக்கின்றமையை அறிகின்றோம்.

## வேறுபெயர்கள் :

இதிகாச காலத்தில் இதற்கு 'ரிசியமுகப்பருவதம்' எனப் பெயர் இருந்தது. இங்குதான் வாலி, சுக்கிரீவன், அனுமன் ஆகியோர் வாழ்ந்தனர் என இராமாயணம் கூறுகின்றது. பிற்காலத்தில் இதனைச் சதுரகிரி என அழைத்தனர். கீழ்க்கொங்கின் ஐந்து கிரிகளைப் பற்றிக் கூறியுள்ளனர். நாமகிரி (நாமக்கல்), அரவகிரி (திருச்செங்கோடு), சங்கர்கிரி (சங்ககிரி), நைனகிரி (நைனாமலை), சதுரகிரி (கொல்லிமலை) என வழங்கினர். பிற்கால அறப்பள்ளி ஈசர்சதகம் 'சதுரகிரி' என்றே கூறுகின்றது. திருநாவுக்கரசர்

''தமிழ் கொல்லியறைப்பள்ளி'' என்று கூறுகின்றார். அதற்குப் பின் இது இன்றும் கொல்லிமலை என்றே வழங்கப்படுகின்றது. ''கொல்லியாண்ட குடவர் கோவே'' என்று சிலப்பதிகாரம் செங்குட்டுவனைச் சுட்டுகின்றது. எனவே சங்க காலம் முதல் இக்காலம் வரை கொல்லிமலை என்ற பெயரே இதற்கு நிலைத்துள்ளது.

**கொல்லிமலையின் தற்கால எல்லையளவு:**

கொல்லிமலை சேலம் மாவட்டத்தில் நாமக்கல், இராசிபுரம், ஆத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,000 முதல் 4,500 அடி வரை உயரமுடையது. இதன் கிழக்கே தம்மம்பட்டியும், மேற்கே சேந்தமங்கலமும் நாமக்கல்லும், தெற்கே முசிறியும் வர கூரும். வடக்கே ஆத்தூரும், இராசிபுரமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இது தென்வடலாய் 28 கிலோமீட்டர் நீளமும் கிழமேலாய் 19 கிலோமீட்டர் அகலமும் உள்ளது. இது கிட்டத்தட்ட 535 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. ஐந்து அருவிகளையும், 16 நாடுகளையும், 260 சிற்றூர்களையும் உடையதாக இது விளங்குகின்றது.

**கொல்லிக் கூற்றம்:**

கொல்லிமலையும் அதன் சுற்று வட்டாரங்களையும் அடக்கிய பகுதிக்குக் கொல்லிக்கூற்றம் எனப்பெயர் வழங்கப்பட்டது. பதிற்றுப்பத்து 8-ஆம் பத்தின் பதிகம் பெருஞ்சேரலிரும் பொறை அதியனைச் சோழ, பாண்டியருடன் வென்ற இடம் குறிக்கின்றது. அதில், ''கொல்லிக் கூற்றத்து நீர் கூர்மீமிசைப் பல்வேல் தானையதிகமானோடு இருபெருவேந்தரை உடனிலைவென்று'' என்ற அடிகள் வருகின்றன. ''கொல்லிமலையைச் சூழ்ந்த நாட்டைக் கொல்லிக்கூற்ற மென்பார்'' என உரை கூறியுள்ளதும் அறிதற்குரியதாகும். எனவே அக்காலத்தில் வல்வில்ஓரி ஆண்ட கொல்லிமலையும், அவன் ஆட்சிக் குட்பட்டிருந்த அம் மலை சூழ்ந்த இடங்களும் கொல்லிக்கூற்றம் என்றபெயருடன் விளங்கியது. கொங்கு நாட்டில் கொல்லிக்கூற்றம் ஒரு சிறு பகுதியாக இருந்திருக்கின்றது என்பதை இவற்றால் அறியலாம்.

கொல்லிக் கூற்றத்தின் வடக்குப் பகுதியில் அதியமான் நெடுமான் அஞ்சியின் நாடு இருந்தது. கிழக்குப் பகுதியில் மலையமான் திருமுடிக் காரியின் நாடு இருந்தது. தெற்குப் பகுதியில் இடைக்குலக் குறுநில மன்னன், காமூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்ட கழுவுள் என்பவன் நாடு இருந்தது; மேற்குப் பகுதியில், வேளிர் குறுநில மன்னர்களின் நிலமும், இரும்பொறையின் நாடும் திகழ்ந்தன!

தற்கால அளவில் கொல்லிமலையும், ஆத்தூர், இராபுரம்,நாமக்கல் வட்டமும் அடங்கியபகுதி, அக்காலக் கொல்லிக் கூற்றமாக இருந்திருத்தல் வேண்டும். இதில் சின்னக்கல்ராயன் மலையும், பெரிய கல்ராயன் மலையும் அடங்கி இருத்தல் வேண்டும்.

**கொல்லி மலையில் அடங்கிய நாடுகள்:**

கொல்லி மலையில் பதினாறு நாடுகள் உள்ளன. நாடு என்பது பெரிய ஊர் அடங்கிய தற்காலத்து ஊராட்சிக்குட்பட்ட எல்லையளவினதாக இருக்கலாம். ஓரியின் காலத்திலேயே இந்த ஊர்களாகிய நாடுகள் இருந்திருக்கின்றன. ஓரி யாழ்ப்பாணர்களுக்கு நாடு பல பரிசாகக் கொடுத்தான் எனச் சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. ''குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த..........ஓரியும்'' (சிறுபாண்—109—111 எனவரும் அடிகள் சான்றாகும்.

நாமக்கல் வட்டத்தில் அடங்கிய நாடுகள் தேவனூர் நாடு, சேறூர் நாடு, சேவூர் நாடு, தின்னனூர் நாடு, வாழவந்தி நாடு, அரியூர் நாடு, வளப்பூர் நாடு, குண்டூர் நாடு என எட்டாகும். இராசிபுரம் வட்டத்தில் அடங்கிய நாடுகள் பிப்புலா நாடு, ஆலத்தூர் நாடு, குண்டுணி நாடு, இடப்புலி நாடு, பைல் நாடு, சித்தூர் நாடு, பிறகரை நாடு, நாராயண நாடு என எட்டாகும். ஆக, பதினாறு நாடுகள் கொல்லி மலையில் உள்ளன. பெரிய கல்ராயன் மலையில் மேல்நாடு, கீழ்நாடு என இரு நாடுகள் உள்ளன. ஆக அந்தக் காலத்தில் ஓரியின் ஆட்சிக் காலத்தில் இந்த நாடுகள் இருந்திருக்கின்றன.

இந்த நாட்டுப் பெயர்கள் அப்படியே உள்ளன என்றாலும் திரிந்தும் இருக்கலாம். அரியூர் நாடு என ஒன்று உள்ளது. அது ஓரியூர் நாடு என இருந்திருக்கலாம். வளப்பூர் நாடு, அரியூர் நாடு அடங்கிய பகுதியில் தான் ஓரியின் நகரம் இருந்திருத்தல் வேண்டும். அதற்கான அறிகுறிகள் உள்ளன.

**ஓரியின் மலைவளம்:**

கொல்லி மலைத்தொடர் அடுக்காய் அமைந்து எழிலும் பொழிலும் பெற்று விளங்குகின்றது. வானளாவிய மரங்களும். தேன் அளாவிய பொழிலிடங்களும் நிறைந்தது. இயற்கை எழில் கொஞ்சும் ஏற்றமிகு அருவி பாலாறாய் இழும் என இழியுங் காட்சி மாட்சிமையுடையது. பரிதியின் செல்வன் விரிகதிர் தானைக்கு இருள்படு பூம்பொழில் நிறைந்தது. வெயினுழைபறியா குயில்நுழை பொதும்பர் பல சூழ்ந்தது.பனிவரை ரவாய்த்தே மாண் பொழிலுடையது வல்வில் ஓரியின் மாரியன்ன வண்கைத் திறம்பாடும் வெண்மை மாநீர் அருவி இசை பாடிக் கொண்டிருக்கும்.

இது சூளிர் அறைப்பள்ளி ஈசன் குடிகொண்டது. பூம்பொழில் வாய் திறந்து முல்லை நகைப்பாலும், தேமாந்தளிராலும் வந்தோரை வரவேற்கும்; வேரல்வேலி வேர் கோள் பலவின் சாரல் நிறைந்தது; தேமாவும், தீம்பலவும், ஆசினியும், அசோகும், கோங்கும், வேங்கையும், குரவமும் விரிந்து பரந்தது; நாகமும், திலகமும், நறவும், நந்தியும், மாதவியும், மல்லிகையும் மணங்கமழ்வது; பாதிரியும், பாவைஞாழலும், பைங்கொன்றையும், பிணியவிழ்ந்து மணப்பது; புன்கும், புன்னாகமும், முருக்கொடு முகை சிறந்தது; வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசை பாடுவது; தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும், பொழிலது; பசும் பொற் சிகரங்களின் முகடு தொடுத்து வந்து இழிதரும் அருவி பல பொன் கொழிக்கும்.

அந்த அணிகிளர் ஆடகப் பாறை மேல் முளையிள ஞாயிறு இளவெயில் எறிப்ப இளமயில் ஆடும்; வண்டும், தேனும் யாழ்முரலும்; வரிக்குயில்கள் இசைபாடும்; வாழை வடித்த தேன் நறவினைப் பாறை நெடுஞ்சுனை அறியாது உண்ட கடுவன் மந்தி அயலது கறிவலர் சாந்தம் ஏறல் செல்லாது கண்படுத்துறங்கும்; யானை, வேங்கை, மான், வரையாடு, கேழல் பன்றி, முயல், உடும்பு எனப் பல்வேறு விலங்கும் எய்தியது; கொல்லிமலையின் நல்லெழில் வளத்தை அகம் புறம், நற்றினை, குறுந்தொகை, திருமுருகாற்றுப் படை, பாண்டிக் கோவை ஆகிய நூல்களில் காணலாம்.

**சுரும்பார் சோலை:**

பதிற்றுப்பத்து 91ஆம் பாடல் 18-25 வரிகளில் கொல்லி மலையின் வளம் வருணனை கூறப்பட்டிருக்கிறது. அதிய மானைக் கொல்லிக் கூற்றத்தில் வென்ற இளஞ்சேரலிரும் பொறை தன் படை வீரர்களுடன் கொல்லிமலையில் தங்கி இருந்தான். மூங்கில் வேலியாக உள்ள பலா மரங்கள். அவற்றில் முழவு போல் பழுத்த பெரும் பலாப்பழங்கள் விளங்கும்.

காந்தள், முல்லை, பிடவம் படர்ந்துள்ள மலைவாழ் மக்கள் வீடுகள், சுரும்பார் சோலை சூழ எழிலோடு விளங்கு கின்றன. அங்குள்ள மக்கள் செழுங்குடிச் செல்வர்கள். புதியவர்களுக்கு நறுந்தேனும், தீம்பலாவும், மூங்கில் புழை யில் முதிர்ந்த மதுவும் மாந்த அளித்தனர். அவனது யானை களும் பிடியொடு மகிழ்ந்தனவாம்.

''வேறு புலத்திறுத்த வெல்போ ரண்ணல்
முழவி னமைந்த பெரும்பழ மிசைந்து
சாற யர்ந்தன்ன காரணி யாணர்த்
தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்திக்
காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவல ரிரவலர்க் கீயும்
சுரும்பார் சோலைப் பெரும்பெயர்க் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து''

(பதிற்—91 : 18—25)

வண்டுகள் பொருந்திய சோலை சூழ்ந்த பெரிய பெயரை உடையது கொல்லிமலை. அம் மலையில் உள்ள இருவாட்சிப் பூக்களுடன் பச்சிலையைத் தொடுத் தணிந்து, மின்னலை உமிழ்ந்தாற் போன்ற ஒளி திகழும் அணிகளையுடைய ஆய மகளிர் வாழ்கின்றனர். அவர்களின் கூந்தல் மறையும்படி யாக வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும். அவர்கள், ''நீடமை விளைந்த தேக்கட்டேறல்'' (திருமுருகாற்றுப் படை—195) இரவலர்க் கீவார்கள் என முருகாற்றுப்படை கூறுகின்றது. ''ஓரி விசும்பில் கருவிவானம்'' (புறம்—204) ஓரியின் வரையாத கொடை போல பொழிகின்றது. அத னால், ''சாரல் அருவிப் பயமலை''(புறம்-152) யாகத் திகழ் கின்றது. அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்—பருவிலைக் குளவியொடு பசுமரங்கட்கும் — காந்தள் வேலிச் சிறுகுடி மக்கள், ''கருங்கண் வேழத்துக் கோடு நொடித்துண்ணும் வல்வில்லோரி கொல்லிக் குடவரை'' (குறுந்தொகை—100) என்பார் கபிலர்.

பாண்டிக்கோவை இக் கொல்லி மலையின் வளத்தைப் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளது; மழை தவழ் கொல்லிக் குட வரையில் சூழ்பொழில், ஈர்ம்பொழில், விண் தோய் வரையாடிய புனம், தாழ்சுனை, பைம்பூந்தேமாந்தழை யொடு கண்ணியும் கொண்ட செழும்புனம், வரைவளர் மாநீர் அருவி, முழங்கு கொண்டல், மூரிக்களிறு, வாய் நகும் முல்லையம் பூம்பொழில், குளிர் அறைப்பள்ளி, பயங்கெழு பலா, காந்தளங்கண்ணி செழுங்குடிச் செல்வர்கள் உள்ளன வாகப் பாடியுள்ளது. வாழைக்கனியின் தேனும், கொம்புத் தேனும் விழுந்து ஊறிய சுனை நீரினை உண்ட கடுவன் மயக்கமுற்று மிளகு கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏற முடியாது மலர்ப் படுக்கையில் தூங்கும் இன்பமுடையது என்பார் குறிஞ்சி பாடிய கபிலர் அகநானூற்றில் (அகம்-2).

### கொடைவள்ளல் வல்வில் ஓரி

கொடைமடம்பட்ட கடையெழு வள்ளல்களில் ஓரியும் ஒருவன். ''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு'' என்ற குறள் நெறிபற்றி வாழ்ந்தான் ஓரி. வில்லாற்றல் மிக்க வன்னெஞ்சர்க்கு இல்லார்க்கு ஈயும் நல்ல பண்பு இருப்பது அரிது. ஆனால் வல்வில் ஓரி அதற்கு விலக்கானவன் என்பதை அறிகின்றோம். வல்வில்ஓரி காட்டு வழியிலே வாடிக் கிடந்தவர்க்கு தான் வீழ்த்திய மான் ஊன் அளித்தான்; தேன் பொதிந்த சுனை நீர் அருத்தினான். தேன் ஒழுகும் பலாக் கனி வழங்கினான். வாட்டம் தெளிந்து, ''யார் நீ'' எனக் கேட்டனர் புலவர்கள். தன்மலை பிறந்த நன்பொன் பல் மணிக் குவையொடு தான் அணிந்த முத்தாரம் நல்கினான்; தன் பெயர் கூற நாணி மறைந்தனன். புகழ் வேண்டாப் புரவலன் ''யார் கொல்?'' என வந்தவர்களை விசாரித்தனர். 'ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பன், சாரல் அருவிப் பயமலைக் கிழவன் ஓரி தான்'' என்றனர். வன்பரணர் முதலான புலவர் கூட்டம் வியந்தது. கடவுள் என வந்து காத்தவன் வேட்டுவன் அல்லன் கொல்லி ஆளும் கொற்றவன். ''இறைவன் ஆகலின் மண்முழா அமைமின்; பாண் யாழ் நிறுமின்; பாடுவில் விறலி! ஓர் வண்ணம் பாடுமின். 'கொண்ம்' என சுரத்திடை நல்கியோன் கொல்லிப்பொருநன் ஈகைவிறல் வெய்யோன்''. அவன் புகழ் சால் சிறப்பைப் பாடுமின் எனப் பாடிச் சென்றனர். அப்பாடல்,

ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
சாரல் அருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்லோ? அல்லன் கொல்லோ?
பாடுவில் விறலி ஓர் வண்ணம்; நீரும்.
.................................... .........
கோஎனப் பெயரிய காலை ஆங்கது
தன்பெயர் ஆகலின் நாணி மற்றுயாம்

நாட்டிடன் நாட்டிடன் வருதும், ஈங்கோர்
வேட்டுவர் இல்லை, நின்ஒப்போர் என
வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்தின்
தான்உயிர் செகுத்த மான்நிணப் புழுக்கோடு
ஆன் உருக்கன்ன வேரியை நல்கி
தன்மலைப் பிறந்த தாஇல் நன்பொன்
பல்மணிக் குவையொடும் விரைஇ கொண்ம்என
சுரத்திடை நல்கி யோனே, விடர்ச்சிமை
ஓங்கிருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா ஈகை விறல்வெய் யோனே'' (புறம்-152)

**வரையாது சுரக்கும் வள்ளல்:**

''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' என்பார் வள்ளுவர். ஆனால் நம் வள்ளல் வல்வில்ஓரியோ வந்தவர்க்கெல் லாம் வாரி வழங்கினான். பொன் கொடுத்தான்; பொருள் கொடுத்தான்; பெருவுருவ யானையும் கொடுத்தான்; அருமணி இலங்கும் அழகுத் தேரையும் கொடுத்தான்; பாடி வரும் பாணர்க்குப் பல ஊரும் கொடுத்தான்; ஆடி வரும் கூத்தர்க்கு வளநாடும் கொடுத்தான்! கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்பர். ஓரி ஆளும் வேரி பழ மலை காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வரும், கலி மகிழ் மேவலர்க்கீயும் இயல்பினராய் இருந்தனர். அவனது சுரும்பார் சோலைப் பெரும் பெயர்க் கொல்லிப் பெருவாய் மலரொடு, 'கலையுணக்கிழித்த முழவு மருள் பெரும் பழம்' (புறம்—236) கொடுத்தனவாம்.

வரையாது சுரக்கும் வல்வில்ஓரியைக் கழைதின் யானையார் வியந்து பாடுகின்றார்.

கொல்லி மலைமேல் தவழும் அல்லார் எழிலி நில்லாது பொழியும். அதுபோல இரவலர்க்குத் தள்ளாது ஈயும் வள்ளலே! பிறரிடம் சென்று இல்லையென இரத்தல் இழிந் தது; இரந்தவர்க்கு இல்லையென இயம்புவது அதனினும் இழிந்தது. குறிப்பறிந்து வறியார்க் கொன்று ஈவதே

உயர்ந்தது; நல்ல உள்ளத்தோடு கொடுப்பதையும் தள்ளி மறுப்பது அதைவிட உயர்ந்த பண்பாகும். தெளிந்த கடல், இமிழ் திரைப் பெருங்கடல் இருந்தென்ன பயன்? நீர் வேட்டோர் வேட்கை தீர உண்ண முடியாதே! ஆனால் கொல்லி மலையின் சுனைநீர் ஆவும் மாவும் சென்று உண்டு சேறுபட்டிருந்தாலும் அதனை அருந்த பெருவழி நடந்தோர் பலவழி இருந்தும் வருவார்களே! கடல்போல் பெருஞ் செல்வர் இடம்பட பலர் இருந்தாலும் அவர்கள் செல்வம் யாருக்கும் பயன்படாதே. ஆனால் ஓரியின் சுனைநீர் அமிழ்த ஊருணிபோல் அனைவர்க்கும் முழுதும் பயன்படுமே! ஓரியிடம் பரிசில் பெற வந்தோர் வறிதே ஏகுவதில்லை! ஓரியைப் பார்க்கும் வாய்ப்பு நேரவில்லையானால் தாங்கள் புறப்பட்ட தீய நேரத்தையும், சகுனத்தையும் பழித்துக் கூறுவார்களே அன்றி ஓரியை இகழ்ந்து கூற மாட்டார்கள். மாரியன்ன வண்கையால் ஓரி வரையாது வழங்குவானே! அதனால் வாழியர் ஓரி! வளமுடன் வாழ்க!—கழைதின் யானையார் ஓரியை இவ்வாறு வியந்து பாடுகின்றார். பாடல் இதோ.

ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று;
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர் வேட்டோரே;
ஆவும் மாவும் சென்று உணக்கலங்கி
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்; அதனால்
புலவேன் வாழியர் ஓரி விசும்பில்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே!

(புறம்—204)

# நாடு கொடுத்த வேடுவன்

கொல்லிமலை செழும்பலவும், தேமாவும், தீங்கனியும், வெயில் நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர் சூழ் குறும்பொறை நாடுகள் பல கொண்டது. செறிந்த கொம்பு களிடத்தே நறிய பூக்கள் நெருங்கின. இளமையை உடைய முதிர்ந்த சுரபுன்னையையும் குறிய மலைகளையுமுடைய நன்றாகிய நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக் கொடுத்தான் ஓரி வள்ளல் என்பதைச் சிறுபாணாற்றுப் படையில் நல்லூர் நத்தத்தனார் கூறுகின்றார்.

''நளிசினை, நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும்'' (சிறுபாண்—108-111)

பாரி இரவலர்க்குத் தன்னாட்டு ஊர்கள் முன்னூறு கொடுத்தானாம். ஓரியோ ஆடிவந்த கூத்தர்களுக்குத் தன் வளங்கெழு நாடு பலவற்றையும் கொடுத்துயர்ந்தான். ''இல்லையென்றிரப் போர்க்கில்லை யென்றுரையா இதயம் நீ அளித்தருள வேண்டும்'' என்றான் கர்ணன். தொல்லை என்று வந்தோர்க்கும் நல்ல சொல்லி காடுகெழு நாடுங் கொடுத்துவந்தான் வல்வில்ஓரி!

யானை ஈந்த ஓரி:

வன்பரணர் வல்லில்ஓரியின் கொடையை வான ளாவப் புகழ்ந்து பாடுகின்றார். பட்டத்து யானை பூண்ட அணிகலன்களுடன் யானைகளை இரப்போர்க்கு நாளும் நல்குகின்றான்; கதிர் விடுகின்ற காலைக் கதிரவன் போன்ற பசும் பொன்னாற் செய்த அணிகளையும் வந்தோர்க்கு அளிக்கின்றான்; வெற்றிக் கடகமமைந்த முன் கையினை யும் கொல்லும் போர் அமையாத ஆதனோடுரியதுமான மழை போலும் வள்ளிய கொடைமையையும் காண எம்

கூத்தச் சுற்றத்துடன் சென்றேன்; பொன்னால் செய்த குவளை மலரை வெள்ளி நாரால் தொடுத்து மணி பதித்து எங் கூத்தர்களுக்கு அணிவித்தான்; பிற அணிகளையும் மகிழ்ந்தளித்தான்; இதற்கும் மேலாகப் பொன் அணி யானைகளையும் பரிசாகக் கொடுத்தான். பசியார தீம் பலவும் தேனும் தந்தான். உண்ட களைப்பாலும், கொண்ட பரிசுகளாலும் மயக்க முற்றனர் எம் சுற்றத்தினர். அதனால் வாரால் வரிந்துப் பிணிக்கப்பட்ட பல கருவிகளையும். தொகுதி கொண்ட இனிய இயங்கள் ஒலிப்ப ஆடலையும் மறந்தனர்; பாடலையும் மறந்தனர்.

"மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்
இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்
சுடர்விடு பசும்பூண் சூர்ப்பு அமைமுன்கை
அடுபோர் ஆனா ஆதன் ஓரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றதுமன் எம்கண்ணுங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வால்நார்த் தொடுத்த கண்ணியும், கலனும்
யானை இனத்தொடு பெற்றனர்; நீங்கி
பசியாரா கல்மாறு கொள் விசிபிணிக்
கூடுகொள் இன்னியம் கறங்க
ஆடலும் ஒல்லார்; தம்பாடல் மறந்தே!
(புறம்—153)

இத்தகைய கொடைமடம் பட்ட கொல்லிக் கோமான் வல்வில்ஓரியைத் தித்திக்கும் பலாச்சுளைப் பாடலால் பாடிய தமிழ்ப் புலவர்கள் பலராவர்.

## தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை.

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை கொல்லிக்கூற்றத்தை வென்றான். அவனது படைத் தலைவன் பிட்டன் கொற்றனுக்கு அதனை ஆளுமாறு உரிமை கொடுத்தான்.

ஆகவே ஓரியின் வரலாற்றோடு தொடர்புடைய பெருஞ்சேர லிரும்பொறையின் வரலாற்றையும் ஓரளவு அறிதல் நலமாகும்.

சேர மரபினர் இரு பிரிவினர் என்பதைப் பதிற்றுப் பத்தால் அறியலாம். 2—6 பத்திற்குரிய மரபினர் உதியன் மரபினர். 7—9 பத்திற்குரிய மரபினர் பொறையன் மரபினர். இரு மரபினரும் சேர நாட்டை இணைந்தும் பிரிந்தும் ஆட்சி செய்தனர். சேர நாட்டின் இருபெரும் தலைநகர் வஞ்சியும், கருவூரும் ஆகும். சில வரலாற்று ஆசிரியர்கள் இதனை அறியாது கருவூர்தான் வஞ்சி என் வரதிட்டுள்ளனர்.

உதியன் சேரலாதன் வழி வந்தோர் சேர நாட்டின் மேற்குப் பகுதியை ஆண்டு வந்தனர். பொறையன் மரபினர் கிழக்குப் பகுதியை ஆண்டு வந்தனர். மேற்குப் பகுதிக்குத் தலைநகர் வஞ்சி. கிழக்குப் பகுதிக்குத் தலைநகர் கருவூர். பதிற்றுப்பத்து சேரர்களின் காலம் கி. பி. 70 முதல் கி. பி. 205 வரை எனலாம்.

உதியஞ்சேரலாதன் கி. பி. 70 முதல் கி. பி. 92 வரை ஆண்டான். இமயவரம்பன் கி. பி. 93 முதல் கி. பி. 150 வரை ஆண்டான். செங்குட்டுவன் கி. பி. 150 முதல் கி. பி. 205 வரை ஆண்டான் என்பதை பதிற்றுப் பத்தாலும் இராசமாணிக்கனார் எழுதிய வரலாற்றாலும் அறியலாம்.

இந்தக் கால எல்லைக்குள்தான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் (மூன்றாம் பத்து) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (இரண்டாம் பத்து) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் (நான்காம் பத்து) ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் (ஆறாம் பத்து) கடல்பிறக் கோட்டிய சேரன் செங்குட்டுவன் (ஐந்தாம் பத்து) ஆகியோர் வஞ்சி வய வேந்தர்களாக இருந்தனர்.

பொறையன் மரபினருள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 125 முதல் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆண்டான் (ஏழாம் பத்து). கி. பி. 150 முதல் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை ஆண்டான் (எட்டாம் பத்து). கி. பி. 167 முதல் இளஞ்சேரலிரும்பொறை ஆண்டான் (ஒன்பதாம் பத்து). இவர்கள் கொங்கு நாடு தழுவிய சேர நாட்டை ஆண்டனர். சேர நாட்டின் முழுப் பகுதிகளையும் உள்ளடக்கியே இரு மரபினர்களும் ஆண்டதால் வெற்றி, சிறப்பு, புகழ் ஆகியன கதம்பமாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. ஆகவே தான் ஒரு மரபினரின் படையெடுப்பும், வெற்றியும் அடுத்த மரபினரின் படையெடுப்பும் வெற்றியும் போலக் கூறப்பட்டுள்ளன.

தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை கி. பி. 150 முதல் கி. பி. 167 வரை (எட்டாம் பத்து) கருவூரைத் தலைநகரமாகக் கொண்டு கீழ் கொங்கையும் சேர்த்து ஆண்டிருக்கின்றான். இவனது சம காலத்தவர்கள் கடையெழு வள்ளல்கள். தகடூர் அதியமான், கொல்லிமலை வல்வில் லோரி, முள்ளூர் மலையன் திருமுடிக்காரி ஆகியோர் இவனோடு சம்பந்தப் பட்டவர்களாவர்.

அதியமான், மலையமான் திருமுடிக்காரி மேல் போர் தொடுத்தான். எதிர்த்துப் போர் செய்யும் ஆற்றலின்றிக் காரி ஓடிவிட்டான். கொங்குநாட்டு வேளிர்களையும் தன்னடிப் படுத்தினான் (புறம் 208). அதியமானின் இந்த வளர்ச்சியை, பெருஞ்சேரலிரும்பொறை விரும்பவில்லை, ஆகவே கொங்கு நாட்டில் தன் ஆளுமை நிலைபெற விரும்பினான். பெருநற்கிள்ளியுடன் சேர்ந்து தன்னோடு போருக்கு வந்த திருக்கோவலூர் திருமுடிக்காரியை நட்பாக்கிக் கொண்டான். சேர நாட்டின் மீது போர் தொடுத்த காமூர் இடைக்குல அரசன் கழுவுள் என்பவனை வென்றான்.

''ஓரி பெரும்படை உடையவன் அல்லன். அவனை அடக்கி அவன் நாடாகிய கொல்லிக் கூற்றத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டால், அதியமானை அடுத்தபடி அடக்குவது எளிதாக இருக்கும்'' எனத் திட்டமிட்டான் பெருஞ்சேரலிரும்பொறை. (அதியமானஞ்சி—பக்கம் 45)

''தக்க சமயத்தில் கொல்லிக் கூற்றத்தின் மேல் படையெடுக்கலாம் என்று இருக்கின்றேன்'' என காரிக்குச் செய்தி அனுப்பினான். ''ஓரி மிகச் சிறியவன். படைபலம் இல்லாதவன். சிறிதளவே படை வைத்துள்ளான்'' என்ற கருத்தை இரும்பொறைக்கு அனுப்பி விட்டான் காரி.

''கொல்லிக் கூற்றத்தைச் சேரமானுக்குக் கொடுத்தால் அவனுக்கு அடங்கிய வேளாக ஆட்சி புரியலாம். இல்லையானால் போருக்கு வருக'' எனத் தூது விட்டான் காரி ஓரிக்கு. ஓரி உடன்பட வில்லை. இரும்பொறையின் சார்பில் காரி ஓரியின் கொல்லிமலை சேவூர் நகரை முற்றுகையிட்டான். பெருஞ்சேரலிரும் பொறையின் தூண்டுதலால் காரி ஓரியை வென்றான்; கொன்றான். (கி. வா. ஜ. வின் அதியமான் அஞ்சி (பக் 46)

# ஓரியைக் கொன்ற காரி

கடையெழு வள்ளல்களில் காரியும் ஒருவன்; பாரிக்குப்பின் கபிலரால் மிகவும் பாராட்டப்பட்டவன் காரியே. இவன் மலையமான் வழியில் வந்தவன்; திருக்கோவலூரைத்தலை நகராகக் கொண்டு ஆண்டவன்; செவ்வேலினை உடைய வன்; மாரி போன்ற கொடை ஈபவன்; மறப்போர் மலையன் எனப் பாராட்டப் பெற்றவன்; அதியமானிடம் தோற்றவன்; பெருஞ்சேரலிரும்பொறையிடம் நட்பு கொண்டவன்; அவனது துணையால் ஓரியைக் கொன்றவன்; பின்னர் அதியமானையும் கொன்றவன். காரி என்ற ஆற்றல் மிக்க குதிரையை உடையவன். ''காரிக்குதிரைக் காரி யொடு மலைந்த ஓரிக்குதிரை ஓரியும்'' (சிறுபா—108—111) ''செவ்வேல், முள்ளூர் மன்னன் கழல்தொடிக்காரி செல்லா நல்லிசை நிறுத்தவல்வில் ஓரிக்கொன்று'' (அகம் 209. 11—14) எனவரும் சான்றால் இவனது குதிரை காரி என்பதும், ஓரியைக் கொன்றான் என்பதும் தெரிய வருகின்றது.

''காரி ஊர்ந்து பேர் அமர்க்கடந்த -மாரி ஈகை மறப் போர் மலையனும்'' (புறம்—158. 6-7) என்ற புறப் பாட்டால், ஆற்றல் மிக்க காரியென்னும் குதிரையால் பெரிய போரினைச் செய்தான் என்பதும், மறப்போர் மறவன் என்பதும், மாரியன்ன வண்கையினை உடையவன் என்பதையும் அறியலாம்.

இவனது வெற்றிச் சிறப்பு, கொடைச்சிறப்பு ஆகிய வைகளைப் புறம் 121,124,126, பாடல்களிலும், நற்றிணை 77, 170, 291 ,பாடல்களிலும், குறுந்தொகை 198, 312 ஆகிய பாடல்களிலும் அறியலாம்.

ஓரி படைபலம் குறைந்தவன் என்பதால், அவனைப் பெருஞ்சேரலிரும்பொறைக்கு அடங்கிய அரசாக இருக்கும்படி வேண்டி, அவன் மறுக்கவே அவன்மீது படையெடுத்துக் கொன்றான். காரி பெருஞ்சேரலிரும்பொறையின் நட்பைப் பெற கொல்லிமலையை ஓரியைக் கொன்று கொடுத்தான். இதனை, ''முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி செல்லா நல்லிசை நிறுத்த வல்வில் ஓரிக்கொன்று சேரலற்கீத்த'' (அகம்—209) என்ற அகப்பாட்டால் அறியலாம். கொல்லி மலையில் ஓரியைக் கொன்று அவனது ஊரில் புகுந்தபோது அம்மக்கள் இவனை எதிர்த்து ஆரவாரம் செய்தார்கள் என்பதும் அறிதற்குரியதாம்.

## ஓரியின் உறவினன் அதியமான்

அதியமான் தகடூரை ஆண்டவன். கடையெழு வள்ளல்களில் ஒருவன்; அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த காவலன்; மழவர் குடியில் வந்தவன்; ஓரியும் மழவர் குடியில் பிறந்தவன் என்பதால் இருவரும் பங்காளிகளாக இருத்தல் வேண்டும்.

''கொல்லி மலையைச் சார்ந்த பகுதிகளை ஓரி என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான்; அவன் விற்போரில் வல்லவன்; அதியமானுக்கும் அவனுக்கும் ஓரளவு உறவு இருந்தது. ஓரியின் கொல்லிக் கூற்றம் அதியமானுடைய நாட்டை அடுத்து இருந்தது'' என 'அதியமான் அஞ்சியில்'' (45) கி. வா. ஜ. அவர்கள் கூறுகின்றார்.

''அதியன் சேர மரபினன். அதிகமான் மரபினரே நாமக்கல்லில் உள்ள அதியயரையன் விண்ணகரம் (அதியன் அஞ்சி—பக்-122) என்ற கோவிலைக் கட்டினர்'' என வருவ

தால் அதிகனுக்கும்,ஓரிக்கும் உறவு முறைத் தொடர்பு இருக்கும் என்பதும் உறுதியாகும்.

''கொங்கு நாட்டுப் பகுதிகளைத் தம் ஆட்சிக்குட்படுத்தினான். கொங்கு கொடுங்கோல் குறுநில மன்னர்களை அடக்கி ஏழு போர் செய்தான்'' எனப் பெருஞ்சித்தினார், ''குன்றும் மலையும்.........'' (புறம்—208) என்ற புறப்பாடலில் கூறுகின்றார்.

வல்வில் ஓரியின் மேல் காரி படையெடுத்து வந்து கொன்றதை அதியன் வெறுத்தான். வீணாக வலிய ஓரியிடம் போருக்குச் சென்று கொன்றதைப் பொறுக்காத அதிகன் காரிமேல் படையெடுத்துச் சென்றான்.

காரி அதிகனுடன் போர் செய்ய ஆற்றாது தோற்று ஓடிக் காட்டிற்குள் புகுந்து கொண்டான். இந்த அவமானத்தால் காரி அதிகனை எப்படியும் பழிவாங்க வேண்டும் எனத் துடித்தான்.

ஓரியைக் கொன்று கொல்லிக் கூற்றத்தைச் சேரன் பெருஞ்சேரலிரும்பொறைக்கு அளித்தான். அதனைக் காட்டி இரும்பொறையிடம் நட்பை வலிமைப் படுத்திக் கொண்டான், அதனால் இரும்பொறையின் ஆற்றல் மிக்க படைகள் அதிகமான் தகடூரைத் தாக்கின. காரி துணை நின்றான். அரிசில் கிழார் இப்போரில் அதிகனுக்கு அறவுரை கூறினார். அதிகன் ஏற்கவில்லை. எதிர்த்துப் போரிட்டான். கொல்லிக் கூறறத்து நீர் கூர்மீமிசை நடந்த போரில் அதிகனும் அதிகனுக்குத் துணையாக வந்த சோழ, பாண்டியரும் தோற்றனர். அதிகன் இறந்தான்.

(பதிற் – பதிகம் 8)

## வல்வில் ஓரியின் வாழ்க்கை....

கொங்கு நாட்டுக் குடிகள் பலர். கொங்கர், கோசர், கங்கர், பூழியர், மழவர், வேளிர், ஆகியவர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்த குடிகளாவர். அதியமானும், வல்வில் ஓரியும் மழவர் குடியில் பிறந்த ஆற்றல் மிக்க வீரர் களாவர். அதியன் சேரமரபினன் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். அதியனும் ஓரியும் மழவர் குடியில் பிறந்தவர்கள் மட்டுமல்லாது உறவினர்களாகவும் இருந்திருக்கின்றனர். ஒரு குடியில் பிறந்த பங்காளிகளாக இருத்தல் வேண்டும்,

''மழவர் பெருமகன் மாவண் ஓரி'' (நற்றிணை—52) என்ற நற்றிணை அடியால் ஓரி மழவர் குடியில் வந்தவன் என்பது உறுதியாகின்றது,

மழவர் குடியில் பிறந்த வல்வில்ஓரி மறவனாக, மாவீரனாக இருந்தான். இளமையிலேயே வில்லாற்றல் மிக்கவனாக இருந்திருக்கின்றான். இவனுடைய தந்தை ஆதன் ஆதல் வேண்டும். ஐங்குறு நூற்றில் ''வாழியாதன் வாழியவினி'' என்ற தொடர் வருகின்றது. பெருமழைப் புலவர். பொ.வே. சோமசுந்தரனார், ''ஆதன்வாழியாதன் என்னும் சேரமான்; இவன் கபிலராற் பதிற்றுப்பத்தில் பாடப்பட்ட வள்ளற் பெருமான் ஆவன். செல்வக்கடுங்கோ வாழியாதன் என்றும் வழங்குப. இவனுக்குப் பின்னர் இவன் பெயரால் ஒரு பழங்குடி நிலவியது. ஆதனவினி, ஆதன் எழினி, ஆதன் அழிசி, எனவரும் பெயர்கள் சான் றாகும் என்பர்''.

எனவே ஆதன் என்ற சேரர் வழியில் இந்த மழவர் கூட்டம் தோன்றி இருக்கலாம். ஆதனவினி வழியில் ஓரி யும், ஆதன்எழினி வழியில் அதியனும் தோன்றி இருக்க லாம்.

வல்வில்ஓரியின் வில்லாற்றல், வீரம், சேரர்வழித் தோன்றல் பலரின் ஆட்சியிலிருந்த கொங்கு நாட்டுக் கொல்லிக் கூற்றம் அவன் ஆட்சியில் வர ஏதுவாக இருந்திருக்கிறது. உ. வே. சா. அவர்கள், ''வில்லாற்றல் மிக்க வல்வில்ஓரி தனது தனித்திறனால் கொல்லிமலை ஆட்சியைப் பிடித்தான்'' என்பார்.

எனவே ஆதன் வழியில் வந்த ஆதன், ஓரியின் தந்தை ஆகலாம். ஓரியை ''ஆதன் ஓரி'' எனப் புறநானூறு கூறுவதும் சான்றாகும். ஓரியின் மனைவி வேண்மாள். இவள் கொங்கு நாட்டு வேளிர் குலப் பெண்ணாவாள். ஓரியின் மகள் ''பாவை'' ஆகத்தான் இருக்கவேண்டும். கொல்லிப்பாவை என்பது ஓரியின் மகள்தான். மிக்க அழகு வாய்ந்தவள். அதனால் தான் தெய்வப்பாவை என்றும், பிற அழகிய பெண்ணிற்கு உவமையாகக் கொல்லிப்பாவை காட்டப்படுகின்றாள் என்பதும் குறிப்பிடத் தக்கதாம்.

வல்வில் ஓரிக்கு மகன் இல்லை. கொல்லிப்பாவை என்ற நல்லியல் மடந்தை மட்டுமே. ஓரி இளமையிலேயே காரியால் கொல்லப்பட்டான். ஓரியைக் கொன்றதும் காரி கொல்லிக் கூற்றத்து சேவூர் தலைநகரில் புகுந்தான். மக்கள் அவனை எதிர்த்து ஆரவாரம் செய்தனர். அப்பொழுது வேண்மாளும், ஓரியின் மகள் பாவையும் ஓரியுடன் உடன்கட்டை ஏறி இருக்க வேண்டும். அதனால் ஓரிக்குப் பின் அவன் மரபினர் சேரனாட்சிக்கு உட்பட்டு யாரும் இருக்கவில்லை. ''பெருஞ்சேரலிரும்பொறை தகடூர்ப்போரில் பெருவிறலோடு போரிட்ட பிட்டங் கொற்றனுக்கு கொல்லிக் கூற்றத்தை உரிமையாக்கினான்.'' (அதியமான் அஞ்சி பக் – 122) என கி. வா. ஜ. அவர்கள் கூறுகின்றார். பிட்டங் கொற்றனுக்குப் பின் பழையபடி கொல்லிமலை சேரன்செங்குட்டுவன் நேரடி ஆட்சிக்கே போய்விட்டது.

அதனால் தான் சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன், ''கொல்லி யாண்ட குடவர் கோவே'' என சிறப்பிக்கப்படு கின்றான்.

பெருஞ்சேரலிரும்பொறை தன் மகன் இளஞ்சேரலிரும் பொறைக்கு வல்வில்ஓரியின் ''ஓவத்தன்ன உருகெழுநெடு நகர்ப் பாவை யன்ன'' மகளை மணங் கேட்டிருக்கலாம். மறுத்த ஓரியின் மீது காரியைப் போருக்குத் தூண்டி கொன் றிருக்கலாம்.

## ஓரியின் மகள் பாவை

ஓரியின் கொல்லிப்பாவை, ஓவியத்தைப் போல எழில் உடையவள். 'ஓவத்தன்ன உருகெழு பாவையன்ன' எனும் பதிற்றுப்பத்தால் இது உறுதியாகிறது. மயில்போலும் சாயலை உடையவள். ''ஓரி கொல்லிக்கலி மயில் கலா வத்து அன்ன இவள் ஒலிமென் கூந்தல்'' (நற்றிணை—265) மயில் தோகை போன்ற மென்மையான நீண்ட கூந்தலை உடையவள்; மாந்தளிர் போன்ற மேனியை உடையவள்; எழில் மிக்கவள்; ஆய்ந் தெடுத்தணிந்த தொடியினை உடையவள்; ''ஆய்தொடி எழின்மாமேனி மகளிர்'' (நற்றிணை—320) என்பது சான்றாகும். ''புதிதியல்பாவை விரிகதிர் இளவெயில் தோன்றியன்ன ஆய் நலம்'' (நற்-192) என்பதால் இவள் எழில் நலம் கண்டோர் வியக்கும் வண்ணம் அமைந்தது எனலாம். ''உயர்ந்த தன் மேற்றே உவமை'' என்பதால் ஒப்பாரும் மிக்காரும் இல்லா எழில் நலம் மிக்க ஓரியின் மகள் பாவையை அக்காலத்துப் புலவர் கள் தங்கள் தலைவியர்களுக்கு உவமை காட்டினர் போலும்.

# கொல்லிப்பாவை பற்றிய இலக்கியங்கள்

கொல்லிப்பாவை பற்றிப் புறநானூறு, நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், சிந்தாமணி, சித்திரமடல், பாண்டிக்கோவை ஆகிய இலக்கியங்கள் கூறுகின்றன. கபிலர், பரணர், பாலத்தனார், இளங்கோ, பாலைக் கௌதமனார், திருத்தக்கதேவர் ஆகியோர் பாடியுள்ளனர்.

தமிழ் இலக்கியங்கள் யாவும் எழில்மிக்க இளநங்கையர்களைத் தெய்வ வடிவமாகப் பாடுவது இயல்பு. மானிட மகளோ? தெய்வ மகளோ? என அய்யமுற்று தலைவர்கள் கூறுவதாகக் கூறுவதும் உண்டு. அந்த வகையில் தான் காமனையும், ரதியையும் தோற்றுவித்துள்ளனர். ''கற்பகத்தின் பூங்கொம்போ! காமன் தன் பெருவாழ்வோ! விற்குவளை பவழ மலர் மதிபூத்த விரைக் கொடியோ! பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ, அற்புதமோ சிவனருளோ! அறியேன் என்று அதிசயத்தார்'' (பெரிய புராணம்) எனக் கூறுதல் இலக்கியமரபாகி விட்டது எனலாம்.

''கொல்லி மலையில் செய்து வைக்கப்பட்டிருந்த தெய்வப் படிவம் கொல்லிப்பாவை. அவுணர் கொடிய போர் செய்யச் சமைத்த போர்க் கோலத்துடன் மோகித்து விழும் படி கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்யவளாகிய திருமகளால் ஆக்கப்பட்ட கூத்து'' (சிலம்பு: 6.60-1) சீவகசிந்தாமணியில் (197) விசயைக்குப் பாவையை உவமையாகத் திருத்தக்கதேவர் கூறிய நயத்தை நச்சர் வேறு கருத்துச் செல்லாமல் தன்னையே கருதுவித்தலின் கொல்லிப்பாவை யென்றார்.

பூதத்தால் அமைக்கப்பட்ட அழகிய பாவை என்ப தனைப் பயன் நிறைந்த பலா மரங்களையுடைய கொல்லி மலையின் மேற்குப் பகுதியில் முன்பு பூதம் அமைத்த புதுமை யான இயக்கமுடைய பாவை. இது இள வெயிலின்கண் தோன்றினாலொத்த நின் அழகிய நலம் (நற்றி—192) என விளக்கும்.

இது அழியாத இயல்பின தென்பதை, செவ்விய வேர்ப் பலவின் பயன் நிறைந்த கொல்லி மலையில் தெய்வத்தால் காக்கப்பெறும் குற்றம் நீங்கிய நீண்ட கொடுமுடியையும் அழகிய வெள்ளி அருவியையும் உடைய மேல் வரையிலே மிக்க மழை கடுமையாகப் பெய்தாலும், பேரிடி தாக்கினா லும், வேறு பல கெடுதிகள் உண்டானாலும், பெருநிலங் கிளர்ந்தாலும் தன் அழகிய நல்ல உருவங் கெடாத இயல் பினை உடைய பாவை (நற்—201) என நற்றிணை கருத்து விளக்கம் கூறுகின்றது. (கலைக்களஞ்சியம்—4. பக்கம் 259)

கொல்லிப்பாவை தெய்வ வடிவினது என்பதும், தெய் வத்தால் அமைக்கப் பட்டது என்பதும், புதிய இயல்பினை உடையதென்பதும். மிக்க அழகினது என்பதும், அழகால் நகைத்துக் கொல்லும் ஆற்றலினது என்பதும், ஓவியத்தைப் போல் அழகானதென்பதும், கொல்லி மலையில் மேற்குப் பக்கத்தில் உள்ளதென்பதும், புதுமையான இயக்கமுடைய தென்பதும், அழியாத இயல்பினதென்பதும், தன்னைக் கண்டோரை உயிர் செகுக்குமாதலின் கொல்லிப்பாவை யென பெயர் பெற்றதென்பதும், கண்டாரை மடமையுறுத் துவது—தன்னறிவுணர்வு இழக்க வைப்பது என்பதும், மாயா இயற்கை இயல்பினதென்பதும் இலக்கியங்கள் இயம் பும் செய்திகளாகும்.

# குறுந்தொகையில் கொல்லிப்பாவை

குறுந்தொகை 89, 100, 199 ஆகிய பாடல்களில் கொல்லிப்பாவை பற்றிய செய்திகள் உள்ளன.

''பேஎழுதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை யெழுதிய
நல்லியல் பாவை அன்ன இம்
மெல்லியற் குறுமகள் பாடினள்குறின'' (குறு—89)

''வல்வில் லோரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தன்ளே'' (குறுந்—10.))

கொல்லிக் குடவரையில் — மேற்குப்பகுதிப் பாறையில் கருங்கண் தெய்வத்தால் ஓவியமாக எழுதப்பட்ட நல்லியல்பான பாவை போன்றவள் இந்த மெல்லியல் மடந்தை தலைவி என்பதாம். அந்தக் கொல்லிப்பாவை கண்டாரை அறிவு வீழ்ச்சியுறச் செய்யும் என்பதுமாம்.

# நற்றிணையில் கொல்லிப்பாவை

கற்றோர் ஏத்தும் நற்றிணையில் 185, 192, 201 ஆகிய பாடல்கள் கொல்லிப்பாவை பற்றிக் கூறுகின்றன.

''தேனுடை நெடுவரைத் தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை அன்னோள்
கொலை சூழ்ந்தனளால் நோகோ யானே'' (நற்-185)

''பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி யன்ன'' (நற்—192)

''தெய்வங் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு
அவ் வெள் ளருவிக் குடவரை அகத்துக்
கால்பொருது இழப்பினும் கதமுறை கடுகினும்
உருமுடன் எறியினும் ஊறுபல தோன்றினும்
பெருநிலம் கிளரினும் திருநல உருவின்
மாயா வியற்கைப் பாவையிற்
போதல் ஒல்லா ளென்நெஞ்சத் தானே'' (நற்றி - 201)

தேன் பொருந்திய நெடிய கொல்லிமலையின் பாறையில் தெய்வத்தால் ஓவியமாக எழுப்பட்ட எழில் மாட்சியுடைய பாவை போல இத் தலைவியானவள் என்னைக் கொலை செய்கின்றாள், தன் எழில் நலத்தால் என்கிறான் ஒரு தலைவன். இப் பாவை பூதத்தால் புணர்க்கப்பட்ட புதிய இயல்பினைஉடையது. அது மாலை நேரத்துப் பொன் அந்திப்பொழுது கதிரில் பொலிவுடன் திகழ்கின்றது. கடுகிய கதிரொளியாலும், மிக்க மழையாலும்,பேரிடி தாக்கினாலும் நிலங்கிளர்ந்து நடுக்கம் ஏற்பட்டாலும் தன்அழகிய உருவ நலங் கெடாத இயல்பினை உடையதாகும்.

## அகம்புறத்தில் கொல்லிப்பாவை

அகம்புறத்திலும் கொல்லிப்பாவை அலங்கரிக்கப்படுகின்றாள்.

''வென்வேல்
களிறு கெழுதானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்''. (அகம்—62)

''பல்பழப்பலவின் பயங்கெழு கொல்லிக்
கார் மலர்கடுப்ப நாறும்
ஏர்நுண் ஓதிமாஅ யோளே'' (அகம்—209)

''ஓவத்தன்ன விடனுடை வரைப்பின்
பாவையன்ன குறுந்தொடி மகளிர்'' (புறம்—251)

கொல்லிமலையில் வெள்ளியை உருக்கி ஒழுகவிட்டால் அன்ன நெடும்பாறையில் இழும் என இழியும் அருவி அடுக்கத்துப் பொற்புடைய பாவை கடவுள் எழுதியது என்பதும், கொல்லிக்கார் மலர் கடுப்ப நாறும் ஏர் நுண் ஓதி மாயோளாகிய பாவை என்பதும், அழகொழுக எழுதிப் பார்த்துவக்கும் ஓவியம் போன்றதும் கொல்லிப்பாவை யென்பதும் அறிதற்குரியதாம். புறம்—251 கூறும் அதே கூற்றைத்தான் பதிற்றுப்பத்தும், ''ஓவத்தன்ன உருகெழு நெடுநகர்ப் பாவையன்னமகளிர்'' (பதிற்—98) என்கின்றது.

''கொல்லிமலையில் செய்து வைக்கப்பட்டிருந்த தெய்வப்படிவம், அவுணர் கொடியபோர் செய்யச்சமைத்த போர்க் கோலத்துடன் மோகித்து விழும்படி கொல்லிப் பாவை வடிவாய்ச் செய்யவளாகிய திருமகளால் ஆக்கப் பட்ட கூத்து'' என சிலப்பதிகார (சிலம்பு—6-60-51) உரையால் கொல்லிப்பாவை தெய்வ வடிவம் என்பதும், போர்க் கோலத்துடன் தீயோரை மோகித்து மயக்குறும் படிச் செய்து விடும் இயல்புடையது என்பதும் பெறப்படு கின்றது. பிற்காலப் பாண்டிக் கோவையும், ''கொல்லிப் பாவையன்ன நிரைத்தார் கருமென்குழலிக்கு'' என கொல்லிப்பாவையை உவமை காட்டுகின்றது.

(பாண்டிக்கோவை—108)

**நகைத்துக் கொல்லும் நங்கை:**

ஆனா நோயில் அழுந்தி நின்றான் தலைவன்; அவனை அணுக விடாது கலங்க விட்டாள் தலைவி. காமங் கைம் மிகக் கையறு துயரில் காண வந்தான். காணக் காட்சி தான வள் தரவில்லை. மலையுறை குறவன் காதல் மடமகள் நோதல் செய்தாள். சொல்லெதிர் கொள்ளாள்; உள்ளல் கூடாதென்றாள்; மாயா இயற்கைப் பாவைபோல் போதல் ஒல்லாள். அவள் நெஞ்சகத்துள்ளாள்; தேனுடை நெடு வரைத் தெய்வம் எழுதிய வினைமாண் பாவைபோல் கொலை சூழ்ந்தனள் (நற்றிணை—185). கொல்லிப்பாவை நகைத்துக் கொல்ல வல்லவள் என்பதைச் சித்திரமடல் சித்திரிக்கிறது.

தேவரையும், முனிவரையும் துன்புறுத்த வருகின்றனர், அவுணரும், அரக்கரும். தேவதச்சன் அதற்கொரு வழி செய்தான். அவன் ஆக்கி வைத்த பெண் வடிவம் நகை செய்து இவனைக் கொல்லும். அவுணரும், அரக்கரும் மாயா இயற்கைப் பாவையின் சிரிப்பால் அழிந்தனர் என்ப தைச் சித்திரமடல் கூறுகின்றது. அவுணரும், அரக்கரும் அவ்வழி ஏகினால் வாடை பட்டவுடன் பாவை நகைத்துச் சிரிப்பாள். அவர்கள் இறந்து விடுவர்.

அது நகைத்துக் கொல்லும் என்பதை,

''திரிபுரத்தைச் செற்றவனும், கொல்லிச்
செழும் பாவையுள் நகைக்கக் கற்ற
தெல்லா மிந்த நகை கண்டேயோ?''

எனச் சித்திரமடல் கூறுகின்றது.

**கொங்கலரயி:**

கொல்லிப்பாவை வல்வில்லோரியின் மகளாக இருக்க லாம். இவளது எழில் நலத்தால் இணையற்ற புகழை

யெய்தி இருக்கலாம். அந்தக் காலத்தில் தமிழகத்தில் உள்ள புலவர்கள் பலரும் இவளது பேரழகையே உவமை யாக எடுத்து இயம்பினர். ''உயர்ந்ததன் மேற்றே உவமை யாகலின்'' என்பதால் உவமைப் பொருள் உயர்ந்தது எனலாம்.

கண்ணகி பெண் தெய்வமானாள். அதுபோல் இந்தக் கொல்லிப் பாவையும் பெண் தெய்வமாகி விட்டாள் போலும். இன்று மலைவாழ் மக்களின் வழிபடு தெய்வம் கொங்கலாயி, அந்தக் கொல்லிப் பாவை தான் இந்தக் கொங்கலாயி என்பதை அறிதல் வேண்டும்.

## வல்வில் ஓரியின் எழுச்சி.

கடைச் சங்க காலத்தில் மூவேந்தர்களின் ஆட்சி தளர்ச்சியுற்ற போது குறுநில மன்னர்கள் ஆங்காங்கு எழுச்சி பெற்றனர். அவ்வாறு எழுச்சி பெற்று ஆட்சி பெற் றவர்கள் கடையெழு வள்ளல்களாவர். அவர்களில் ஓரியும் ஒருவன். ஓரி மழவர் குடியில் பிறந்த மாவீரன்.

கொங்கு நாட்டில் மழவர், பூழியர், கொங்கர் முதலான குடிகள் உழைப்பாலும், ஊக்கத்தாலும் உயர்ந்தவர்கள். சேர நாட்டைச் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆண் டான். அதே சமயத்தில்தான் இமயவரம்பன் நெடுஞ்சேர லாதனும் ஆண்டான். நெடுஞ்சேரலாதன் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டின் மேற்குப் பகுதியை ஆண்டான். செல்வக் கடுங்கோ கொங்கு நாடு தழுவிய கீழ் சேர நாட்டை ஆண்டான்:

செல்வக்கடுங்கோ வாழியாதனுக்குச் சோழனும் பாண்டியனும் எதிரிகளாக இருந்தனர். அவர்களை அழிப்பதில் நாட்டங் கொண்டிருந்தான் வாழியாதன். அந்த சமயத்தில் கொங்கு நாட்டு மறவர் குடியில் மழவர் எழுச்சி பெற்றனர். கொங்கு நாட்டு வடக்குப் பகுதியில் தகடூரிலிருந்த அதியமான் அப் பகுதிக்குத் தலைமை யேற்றான். கீழ் கொங்கில் கொல்லிக் கூற்றத்தில் வல்வில் ஓரி எழுச்சி பெற்றுக் குறுநில மன்னன் ஆனான். இவர்களின் எழுச்சியையும், வளர்ச்சியையும் செல்வக்கடுங்கோவாழியாதன் தடை செய்யவில்லை. அவர்கள் தங்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாகவே இருக்கட்டும் என உடன்பட்டிருந்தான். ஆனால் செல்வக்கடுங்கோவின் மகன் பெருஞ்சேரலிரும் பொறைக்கு இது பெரும் உறுத்தலாக இருந்தது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பேரரசின் கீழ் அவன் மகன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் சேர நாட்டின் ஒரு பகுதியை ஆண்டான். அவன் ஆட்சி புரிந்த போது தான் கொல்லி மலைக்கும், காவிரிக்கும் இடையில் உள்ள மழவர் நாட்டை மழவர் ஆண்டனர் என சோழர் வரலாறு கூறுகின்றது.

இந்தச் சமயத்தில் கொங்கு நாட்டை, சோழ,பாண்டியர் உரிமை கொண்டாடினர். செல்வக்கடுங்கோ முதலில் அவர்களை வென்றான். இதனை ''ஒரு முற்று இருவர் ஓட்டிய ஒள்வாள் செருமிகு தானை'' (பதிற் – 63)எனவரும் பதிற்றுப் பத்தடியால் அறியலாம்.

செல்வக்கடுங்கோ மீண்டும் பாண்டியனுடன் போர் செய்தான். சிக்கற்பள்ளியில் இறந்தான். இந்த நிலையில்தான் பூழியர் குடியில் பிறந்த கழுவுள் என்பவன் சேர நாட்டின் மீது படையெடுத்தான். சோழன் பெருநற்கிள்ளி

யும், மலையமானும் சேர்ந்து சேர நாட்டின் மீது படையெடுத்தனர். இதில் பெருஞ்சேரலிரும்பொறை தோற்றான். பின்னர் காமூரை ஆண்ட கழுவுள் என்பவனை வென்று அவனுக்கு ஆநிரைகளைக் கொடுத்து நட்பாக்கிக் கொண்டான். மலையமான் திருமுடிக்காரியையும் சோழனிடமிருந்து பிரித்து நட்பாக்கிக்கொண்டான். கொங்கு நாட்டின் பிறவேளிர் தலைவர்களையும் அடக்கினான். ஆனால் அதிகமானையும், வல்வில் ஓரியையும் விட்டு வைத்தான். இருவரும் உறவினர் என்பதாலும் இருவரும் சேர்ந்து ஒன்று பட்டு தனக்குத் தொல்லை கொடுப்பார்கள் என்பதாலும் விட்டு வைத்தான்.

அதியமான் வளர்ச்சியில் அழுக்காறு கொண்டான் பெருஞ்சேரலிரும்பொறை. அதியமானும் கொங்கு நாட்டுக் குறுநிலத்தலைவர்களைஒன்று படுத்தி பெருஞ்சேரலிரும் பொறையை எதிர்க்கத்திட்டமிட்டான். இந்த நிலையில் பெருஞ்சேரலிரும் பொறை ஓரியைத் தனக்கு அடங்கிய குறுநிலத் தலைவனாக ஆக்க முயற்சித்தான். ஆமுர் கழுவுளை நட்பாக்கியது போலவும், மலையமானை நட்பாக்கிக் கொண்டது போலும் ஓரியையும் நட்பாக்கிக்கொண்டால் அதியமானை எதிர்ப்பது எளிது என நினைத்தான். மலையமான் திருமுடிக்காரியை ஓரியிடம் தூது அனுப்பினான். தனக்கு அடங்கிய சிற்றரசாக இருக்க வேண்டினான். வல்வில் ஓரி மறுத்துவிட்டான். அதனால் காரியும் ஓரியிடம் வெறுப்புக் கொண்டான்; பெருஞ்சேரலிரும் பொறை ஆத்திரங்கொண்டான். ஓரியையும், அதியனையும் போரில் வெல்லும் நாள் பார்த்திருந்தான். காரி தனக்குப்படை உதவி புரிந்தால் ஓரியைக் கொன்று கொல்லிக் கூற்றத்தை இரும்பொறைக்கு அளிப்பதாக வாக்களித்தான்.

# காரியின் சூழ்ச்சியும் ஓரியின் வீழ்ச்சியும்

காரி அதியமானைப் பழிவாங்க வேண்டும் என உறுதி பூண்டான். இரும்பொறையின் பக்கபலம் தனக்குண்டு என்பதையும் உணர்ந்தான். இரும்பொறைக்குக் கொல்லிக் கூற்றத்தின் மேல் நாட்டம் இருந்ததையும் அறிந்தான். வல்வில் ஓரி வில்லாற்றல் மிக்கவன் என இரும்பொறை எண்ணிப் பார்த்தான். ஓரியிடம் படைபலம் இல்லை என் பதைக் காரி எடுத்துக் கூறினான். இரும்பொறை ஓரியின் மேல் படையெடுத்துப் போரிட வேண்டும் என்ற எண் ணத்தை வெளியிட்டான். ''எனக்குப் படை கொடுத்தால் போதும். நான் ஓரியைக் கொன்று கொல்லிக் கூற்றத்தை அளிக்கிறேன்'' என உறுதி கூறினான். இரும்பொறை உடன்பட்டான். காரிக்குத் தன் பெரும் படையை அளித் தான்.

அதியனிடம் தோற்றோடிய காரி அந்த அவமானத் தைப் போக்க ஓரியிடம் போருக்குப் புறப்பட்டான். காரி யின் படைகள் கொல்லிக் கூற்றத்து ஓரியின் நகரில் புகுந் தன; தீயிட்டன; முற்றுகையிட்டன. இதனைச் சிறிதும் எதிர்பார்த்திராத ஓரி வில்லாற்றலுடன் போரிட்டான். மலையொடு பொருத மால்யானையானான். இழையணி யானை இரப்போர்க்கு ஈந்துவிட்டான்; சுடர்விடு பசும்பூண் பொன் அணி புலவர்களுக்கு அளித்து விட்டான். வளங் கெழு பலவின் ஊர் பல யாழ்ப்பாணர்களுக்குக் கொடுத்து விட்டான். கொடை மடம்பட்ட ஓரி படை பலம் பெருக்க மறந்துவிட்டது இயல்பு தான். அடுபோர் ஆன—ஆதன் ஓரி காரியின் சூழ்ச்சி மடுவில் அழுந்தி விட்டான். பிட்டங் கொற்றன் என்ற பெருஞ்சேரலிரும்பொறையின் படைத் தலைவன் ஓரியின் ஓரிக்குதிரையை வேலால் வீழ்த்தினான்.

வல்வில் ஓரிக்கும் அடி சறுக்கியது! அருகில் இருந்த காரி ஓரியை வாளால் வெட்டி வீழ்த்தினான். பிட்டன் கொற்ற னுடன் போர் செய்து கொண்டிருந்த ஓரி காரியின் இந்த சூழ்ச்சித் தாக்குதலை அறியவில்லை. ஓரியின் வில்லாற்றல் வீழ்ந்தது; காரியின் சூழ்ச்சிச் சொல்லாற்றல் விழித்தது. கொல்லி ஆண்ட வல்வில் ஓரியின் புகழ் சொல்லில் நிலைத் தது! நற்றிணை 320 ஆம் பாட்டில் கபிலர் காரி ஓரியைக் கொன்ற செய்தியைப் பாடியுள்ளார்.

## அதியமானிடம் தோற்றோடிய காரி

கொல்லிக் கூற்றம் வல்வில் ஓரியின் ஆட்சியில் இருந் தது. கொல்லி மலையும் அதனைச் சூழ்ந்த பகுதியும் கொல்லிக் கூற்றம் எனப்பட்டது. கொல்லிக் கூற்றத்தை அடுத்து வடபால் தகடூர் கூற்றம் இருந்தது. அதனை அதியன் ஆண்டான். அதியனும், ஓரியும் மழவர் குடியினர். ஒரு தாயத்தினர். கொங்கு நாட்டில் சேரர் ஆளுமைக்கு ஊறு விளைப்பதாக அதியமானைச் சந்தேகித்தான் பெருஞ்சேரலிரும்பொறை. இரும்பொறை கொங்கு நாட்டு வேளிர் தலைவர்களை வென்றான். தகடூர் அதியமான் சேரனது ஆட்சி வளர்வதில் அழுக்காறு கொண்டான். குறுநிலத் தலைவர்களோடு சேர்ந்து சேரனுடன் போர் செய்யத் திட்டமிட்டான். அரிசில் கிழார் அதியனுக்கு அற வுரை கூறித் தடுத்தார். உடனே அதியமான் திருக்கோவ லூர் மேல் படையெடுத்தான். திருமுடிக்காரி, ஓரியை இரும்பொறைக்கு அடங்கியவனாக இருக்க வேண்டியதை அறிந்திருந்தான். அதனாலும் காரி அடக்க வேண்டும் என்ற எண்ணம் எழுச்சி பெற்றது. அரவக் கடற்றானை

அதியன் ஆர்ப்பெழுந்து வருவதை அறிந்தான் காரி. காரி செவ்வேலினையும் கழல் தொடியினையும் உடையவன்; போரிட ஆயத்தமானான். தன் படைகளைத் திரட்டினான்; அதியன் படைகள் காரியின் முள்ளூரை முற்றுகையிட்டன; காரியின் படைகள் முற்றுகையை முறியடித்தன. இரு கடலும் கிளர்ந்தாற்போல் இரு படையும் பொருதன. காரி தன் காரிக்குதிரை மீதிருந்து போரிட்டான். அதியமானின் கடல்போலும் படைகள் முன் காரியின் ஏரி போலும் படைகள் எதிர் நிற்க இயலவில்லை. யானைகள் இறந்தன; குதிரைகள் குலைந்து ஓடின. வீரர்கள் சிதைந்தழிந்தனர். காரி காட்டிற்குள் ஓடி மறைந்து கொண்டான்; அதிகன் வெற்றியுடன் தகடூர் திரும்பினான்; தோற்றுப் புறமுதுகிட்டு ஓடிய அவமானத்தால் காரி மனங்கலங்கி இருந்தான். அதியமானைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என உறுதி பூண்டான். பெருஞ்சேரல் இரும்பொறையின் துணையை நாடினான். இரும்பொறையும் அதியமான் மேல் மிக்க கோபங் கொண்டான். இருவரும் கலந்து பேசித் திட்டமிட்டனர். அதியமானைக் கொன்றால்தான் தன் வஞ்சம் தீரும் என காரி நினைத்தான். இரும்பொறை அதற்கான செய்வதாக உறுதி அளித்தான்.

இந்தச் செய்தியைச் சங்கப்பாடல் அகநானூறும் எடுத்து இயம்புகின்றதை அறியலாம்.

''முள்ளூர் மன்னன் கழல் தொடிக்காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக்கொன்று சேரலற் கீத்த
செவ்வேர்ப் பல்வின் பயங்கெழு கொல்லி''

(அகம்—209)

ஓரியைக் கொன்ற காரி கொல்லிக் கூற்றத்தைச் சேர மானுக்கு அளித்தான் என்பதையும் இப்பாட்டால் அறிகின் றோம். நற்றிணை 6—ஆம் பாடலும், ''காரி ஓரியைக் கொல்லி மலையை நண்பனான பெருஞ்சேரலிரும் பொறைக்குக் கொடுத்தான்'' என உணர்த்துகின்றது.

''ஓரி இரவலர்க்கு வரையாது கொடுக்கும் வண்மையன்; கொல்லிமலையை இவன் ஆண்டு வருநாளில் அதியமான் திருக்கோவலூரை முற்றிவென்று கைப்பற்றினான்; அதனை ஆண்டிருந்த மலையமான் திருமுடிக்காரி அஞ்சியொடு போரில் எதிர்நிற்கலாற்றாது தோற்றோடிச் சேரமான்பெருஞ் சேரலிரும்பொறையிடம் அடைக்கலம் புகுந்தான். அச்சேர மான் பெருஞ்சேரலிரும்பொறை கொல்லி மலையைத்தான் பெறவேண்டும் எனுங் குறிப்புடையனாதலையறிந்த காரி படையொடு சென்று கொல்லிமலையில் ஓரியுடன் போர் புரிந்து ஓரியைக்கொன்று தான் மிக்க ஆரவாரத்தோடு ஓரியினது நகரினுட் புகுந்தான்; அங்ஙனம் புகுதலும் ஊர் முழுதும் ஒல்லென்னும் ஒலி உண்டாயிற்று'' என நற்றிணை ஓரியின் வரலாற்றைக் கூறுகின்றது.

''ஓரிக் கொன்ற ஒருபெருந் திருவில்
காரி புக்க நேராற் புலம்போல்
கல்லென் றன்றா லூரே'' (நற்றிணை 320)

ஓரியைக் கொன்ற காரி வெற்றிவிழாக் கொண்டாட ஓரியின் நகரில் புகுந்தான் ''செல்லா நல்லிசை வல்வில் ஓரியை இந்தப்பொல்லாக்காரி கொன்றானே! இவனை நாம் ஊரில் விடக்கூடாது'' என மக்கள் திரண்டெழுந்தனர் பொல்லாக்காரியே நில்லாதே ஓடு! எங்கள் வில்லாளனைக் கொன்று விட்டாயே! எங்கள் முகத்தில் விழிக்காதே! உங்களை மன்னனாக ஏற்கமாட்டோம். வல்வில் ஓரி வாழ்க!

அவன் வல்வில் புகழ் ஓங்குக! என ஆரவாரம் செய்தனர். காரி கொல்லிக் கூற்றத்தை இரும்பொறைக்கு ஆட்படுத்தினான். தன்னாடு சேர்ந்தான்.

பெருஞ்சேரலிரும்பொறை தன் மகன் இளஞ்சேரலிரும்பொறையையும் காரியுடன் அனுப்பி இருக்கின்றான். ஓரி இறந்த பின் இளஞ்சேரலிருப்பொறை தன் படைகளுடன் இந்தக் கொல்லி மலையில் சிறிது நாள் தங்கிவிட்டுத்தான் சென்றிருக்கின்றான். காரி உடனே மக்கள் எதிர்த்ததால் தன்னாடு சென்று விட்டான். இதற்கான குறிப்பு பதிற்றுப் பத்து ஒன்பதில் காணப்படுகின்றது. ஒன்பதாம் பத்து ஒன்றாம் பாட்டில் இதற்குச் சான்றுள்ளது.

''வேறுபுலத் திறுத்த வெல்போரண்ணல்
முழவி னமைந்த பெரும்பழ மிசைந்து
சாறயர்ந் தன்ன காரணி யாணர்த்
தூம்பகம் பழுனிய தீம்பிழி மாந்திக்
காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவலரிரவலர்க் கீயும்
சுரும்பார் சோலைப் பெரும்பெயர்க் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து''

(பதிற்றுப்பத்து 91. 18-25)

போர் முடிந்ததும் இரும்பொறை தன் படை வீரர்களுடன் கொல்லி மலையில் தங்கி இருக்கின்றான். கொல்லி மலையில் உள்ள பலா மரங்கள் புதியதாக வந்த விருந்தினர்களுக்கு முழவுபோல் பழுத்த பலாக்கனியை ஈந்தன. விழவு நாளில் விருந்தினர்களை ஓம்பும் கொல்லிமலை ஓரியின் செல்வக் குடிமக்கள் மூங்கிலில் அடைத்து முதிர்ந்த தேன்

நறவினை மாந்திக் களிக்கின்றனர். இரும்பொறையின் வீரர்களுக்கும் இந்த விருந்து கிடைக்கின்றது. இரவலர்க் கீயும் வல்வில்லான் ஓரியின் கொடைத் தன்மையை அவனது வளமான சோலையும் செய்கின்றது. காந்தள் மாலையும், சுரும்பாரும் சோலையும் இரும்பொறையின் வீரர்களை ஈகையால் ஈர்த்துள்ளன. வெற்றி பெற்றவர்கள் பலா உண்டு, தேறல்மாந்தி, காந்தள் கண்ணி சூடி மகிழ்ந்துள்ள னர். ஆகவே இரும்பொறையே! வேறு புலத்தில் தங்கி இருப்பதை விடுத்து நினது தேவியின் தேவையை நிறைவு செய்ய விரைந்து செல்வாயாக எனப் பெருங்குன்றூர் கிழார் பாடுகின்றார்.

## ஓரிக்குப்பின் கொல்லிக்கூற்றம்.

"காரிக்குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக்குதிரை ஓரியும்" (சிறுபாண்—110—11)

எனவரும் சிறுபாணாற்றுப்படை காரியும் ஓரியும் போர் செய்த நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. காரி ஓரியைக் கொன்றதும் ஓரியின்மக்கள் காரியை ஏற்றுக்கொள்ள வில்லை. பெருஞ்சேரலிரும்பொறை கொல்லிக்கூற்றத்தை விரும்பினான். ஆகவே இந்த இரு காரணத்தாலும் கொல்லிக் கூற்றத்தைக் காரி இரும்பொறைக்குக் கொடுத்தான். இந்த நிகழ்ச்சி தகடூர் அதியமானுக்கு எரிச்சலைத்தந்தது. தன் உறவினன் ஓரியை வலிந்து சென்று கொன்ற காரியைக் கொல்லவேண்டும் என எண்ணினான். இரும்பொறையயும் வெல்லவேண்டும்

எனத்திட்டமிட்டான். ''இரும்பொறை பெரிய படையை உடையவன். அதனால் அவனோடு போர் செய்வது சரி யன்று'' என அரிசில்கிழார் அறிவுரை கூறினார்.

அதியமான் உடனே காரியின் மேல் போர் தொடுத் தான். ''அவன் கையதுவேலே; காலன புனைகழல்; வரிவயம் பொருத வயக்களிறு போல'' (புறம்—100) போர் செய்தான்; முனைத்தெவ்வர் முரண்அவியப்பொருதான்; இவன் இனக்களிறு காரியின் மதிற்கதவை இடித்தது. இவன் வேல் கண்டவர் இழிந்தோடினர்; ''வெல்போரான் முன் நில்லன்'' என ஓடி மறைந்தான் காரி. ''அதியனின் திண்பிணி முரசம் இழுமென முழங்கியது. சென்று அமர் கடத்தல் யாவது? தார் தாங்குதலும் ஆற்றார்; வெடிபட்டு ஓடல் மரீஇய பீடுஇல் மன்னர்'' காரிஓடிமறைந்தான். இரும்பொறையிடம் சென்று அடைக்கலமானான். வெற்றி பெற்ற அதிகன் தகடூர் திரும்பினான். அதியமானின் இந்த வெற்றியை ''முரண்மிகு கோவலூர் நூறி, நின் அரண் அடு திகிரி ஏந்திய தோளே'' என (புறநானூறு—99) ஆம் பாடல் கூறுகின்றது. இரும்பொறைமேல் படையெடுக்க ஆயத்தமானான்.

இருமுறையும் அதியமானிடம் தோற்றோடிய காரி இரும்பொறையைத் தூண்டினான். இரும்பொறை அதிய மான் மேல் போர்தொடுத்தான், காரியும் பெருஞ்சேரலிரும் பொறையின் மகன் இளஞ்சேரலிரும்பொறையும் இதில் உடன் வந்தனர். சேரனின் தானைத்தலைவன் பிட்டன் கொற்றனும் இப்போரில் கலந்து ஆயத்தமனான். கொண்டான். தகடூரை முற்றுகையிட்டனர். அதியன்

சோழ, பாண்டியருக்கும் தகவல் கொடுத்தான். சோழ பாண்டியர் படைகளும் அதியனுக்குத்துணையாக வந்தன; அதியனுடைய படைகள் பெரிதும் மாய்ந்தன. ''ஓங்கு திறல் ஒளிறு இலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்'' அதியமான் (புறம்—88) வலம்படு வாய்வாள் ஏந்திக் களம் படக் கடந்தான்'' (புறம்—91)

இந்தப் போர் கொல்லிக் கூற்றத்து ''நீர் கூர்'' எனும் இடத்தில் நடந்தது. (தற்போது இது சேலம்—அரூர் போகும் வழியில் உள்ள மஞ்சுவாடிக்கணவாயாகும்) இதில் பெருஞ்சேரலிரும் பொறை அதியமானையும், அவனுக்குத் துணையாக வந்த இருபெரும் வேந்தர்களான சோழ, பாண்டியரையும் வென்றான் எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது.

''வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பில் தகடூர் நூறி
பேஎமன்ற பிறழ நோக்கி அவர்
ஓடுறு கடுமுரண் துமியர் சென்று
வெம்முனை தபுத்த காலை'' (பதிற்றுப்பத்து—88)

''கொல்லிக் கூற்றத்து நீர்கூர்மீ மிசைப்
பல்வேல் தானை யதிகாமேனாடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசுங்குடையுங் கலனுங் கொண்டு'' எனவரும்

எட்டாம் பதிற்றுப்பத்தின் பதிகத்தால் அறியலாம்.

போரில் பிட்டன் கொற்றன் அதியமானின் குதிரையைக் கொன்றான். காரி தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டான்; அதியனைத் தன் வேலால் குத்திக் கொன்றான்.

''வெற்றி பெற்ற பெருஞ்சேரலிரும்பொறை தகடூரி லிருந்த செல்வங்களை எடுத்துக் கொண்டான். அதியமா னின் மகன் பொகுட்டு எழினிக்கே தகடூரை உரிமையாக்கித் தனக்கடங்கியவனாக இருக்குமாறு செய்தான்; அதியமானி டம் இழந்த திருக்கோவலூரை மலையமானுக்கே அளித் தான். தகடூர்ப் போரில் பெரு விறலுடன் போர் செய்த தானைத் தலைவன் பிட்டன் கொற்றனுக்குக் கொல்லிக் கூற்றத்தை உரிமையாக்கினான். (அதிகமான் அஞ்சி— பக்கம்—122) வல்வில் ஓரியின் கொல்லிக் கூற்றம் சேரன் படைத் தலைவன் பிட்டன் கொற்றன் ஆட்சியில் வந்தது. இப் போருக்குப் பின் இளஞ்சேரலிரும்பொறை கொல்லி மலையில் தன் படையுடன் சில நாள் தங்கியிருந்தான் எனப் பதிற்றுப்பத்து—91-ஆம் பாடல் கூறுகின்றது.